# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

### அருட்சகோதரிகள்

லூர்து மேரி, மேரி செசரியா, ரூபெல்லா மேரி, ஜெரின் மேரி, லில்லி புஷ்பம், மேரி மௌரிஸ், ஜான்சி மேரி, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - தோகமலை, - வித்யா மேரி, ஸ்டெல்லா ரோஸ்- திண்டுக்கல், மிரியம், புஷ்பா மேரி, ரஞ்சிதம், லோரா மேரி, லீமா, ஜெயசேகர்- கொடைக்கானல், பிரேமா, லில்லி இசபெல்லா மேரி, பாத்திமா, ஜோஸ்பின் மேரி, ஜூலி எலிசபெத்

### பொதுநிலையினர்

பிரான்சிஸ் பேசில், அனிருத் ஜோஸ்வா, ஜேடன், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா, செலின் மேரி, கிளாரா லூர்துமேரி, மிக்கேல் சாமி - கோயமுத்தூர், மேரி - இளையரசனேந்தல், *இருதய விஜில்லா* - திண்டுக்கல், ஜோஸ்வா சந்தோஷ், கெர்மன், கரோலின் பிலலேந்திரன், ததேயுஸ் கரோலின் - திருப்பூர், அற்புதசீலி -திண்டுக்கல், மாசில்லா -தூத்துகுடி, புஷ்பக்கன்னு -கோவை, ஸ்டெல்லா ஜாய்ஸ்- கும்பகோணம், சிப்ரியான்-தெளி, ஜோஸ்பின் சகாயராணி- கும்பகோணம், வியாகுலமேரி- சென்னை, ஜோசப்சக்கர்ஜானி- திருச்சி, ஜான் ஜோசப்

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



அருட்சகோதரி. பிரேமா - திருநெல்வேலி
திரு. ஃபிரான்சிஸ் பேசில் - திருச்சி

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. M. Antony Shaji OSM.






# ஜெபமாலை அன்னை

## பதிப்பாசிரியர் பக்கம்




அன்பு வாசகர்களே! அன்னை மரியின் பக்தர்களே! ஆகட்டும் இதழின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. அக்டோபர் மாதம் 7ம் தேதி ஜெபமாலை அன்னையின் விழாவைக் கொண்டாடுகின்றோம். பன்னிரண்டாம் மற்றும் பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில், தெற்கு பிரான்சில் அல்பிஜென்சியன் கொள்கை செழித்து வந்தது. பழைய ஏற்பாட்டு கடவுள் தீய உலகத்திற்கு ஆதாரம் என்றும், புதிய ஏற்பாட்டு கடவுள் நல்ல ஆன்மீக உலகத்திற்கு ஆதாரம் என்றும் நம்பிய கிறிஸ்தவ இரட்டைவாதிகள் அல்பிஜென்சியன்கள். அவர்கள் சடங்குகளை நிராகரித்து, பொருள் உலகத்தை நிராகரிப்பதற்கான ஒரு வழியாக தீவிர துறவறத்தை ஊக்குவித்தனர்.

1203 ஆம் ஆண்டில், புனித டொமினிக் தெற்கு பிரான்சில் ஒரு அரசு பணிக்காக பயணம் செய்தபோது, இந்த கடுமையான அல்பிஜென்சியன் கொள்கையை எதிர்கொண்டார். அதைத் தொடர்ந்து வந்த இருபது ஆண்டுகளில், பிரசங்கம் மற்றும் விவாதங்கள் மூலம் இந்த கிறிஸ்தவதிற்கு எதிரான கொள்கையை வேரறுக்க முழு மனதுடன் தன்னை அர்ப்பணித்தார். அந்த பணியில் அவர் எதிர்கொள்ளும் சிரமங்களால் விரக்தியடைந்து ஒரு கட்டத்தில், அவர் சில நாட்கள் பிரார்த்தனை மற்றும் உண்ணாவிரதத்திற்காக பின்வாங்கி, வழிகாட்டுதலுக்காக அன்னையிடம் மன்றாடினார். அன்னை அவருக்குத் தோன்றி, அவருக்கு ஜெபமாலையைக் கொடுத்து, தியானிக்க வேண்டிய மறையுண்மைகளை வெளிப்படுத்தி, மறையுண்மைகளை



## உள்ளே



| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| அன்னை மரியாவின் திருப்பயணம் | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| மணிச்சொல்லி அழைப்போம் | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மாதா மன்றாட்டு மாலை | - 25 |
| பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் | - 28 |
| அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

போதிக்கவும், ஜெபமாலையை ஒரு ஆன்மீக ஆயுதமாக ஜெபிக்கவும் அவரை அறிவுறுத்தினார். “ஜெபமாலை” என்ற வார்த்தை லத்தீன் மொழியில் இருந்து வந்தது, அதாவது “ரோஜா தோட்டம்”. “**அருள் நிறைந்த மரியே**” செபம் ஆன்மீக ரோஜவாக ஒன்றாக சேர்ந்து, அவை ரோஜாக்களின் தோட்டத்தை உருவாக்குகின்றன. புனித டொமினிக், நமது அன்னை தனக்கு அறிவுறுத்தியபடி செய்து, தப்பறை கொள்கைகொண்டோரை மதமாற்றம் செய்வதில் மிகவும் வெற்றி பெற்றார்.



ஜெபமாலை அன்னையின் விழா, “வெற்றி அன்னை” என்ற பெயரில் பல வேர்களைக் கொண்டுள்ளது. பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஒட்டோமான் பேரரசின் முஸ்லிம்கள் தென்கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய தரைக்கடல் பகுதியில் விரிவடைந்து கொண்டிருந்தனர். 1571 ஆம் ஆண்டில், டொமினிகன் நாட்டைச் சேர்ந்த திருத்தந்தை ஐந்தாம் பயஸ், ஒட்டோமான் ஆக்கிரமிப்பை நிறுத்துவதற்காக, ஸ்பெயின், வெனிஸ் மற்றும் புனித நாடுகள் என்று அழைக்கப்படும் பல சிறிய கிறிஸ்தவ நாடுகளுக்கு இடையே ஒரு கூட்டணியை உருவாக்கினார். அந்த ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி, புனித நாடுகள் மத்தியதரைக் கடலில் ஒட்டோமான் கடற்படையை எதிர்கொண்டது, மேலும் திருத்தந்தை ஐரோப்பா முழுவதும் வெற்றிக்காக செபமாலை செபிக்க அழைப்பு விடுத்தார், வெற்றி கிடைத்தது. நன்றியுணர்வாக, திருத்தந்தை ஐந்தாம் பயஸ் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் ஞாயிற்றுக்கிழமை “வெற்றி அன்னை” விழாவை நிறுவினார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, திருத்தந்தை பதிமூண்றாம் கிரிகோரி “புனித ஜெபமாலை” விழாவாக பெயர் மாற்றினார். 1671 ஆம் ஆண்டில், இந்த விழா ஸ்பெயின் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது, மேலும் 1716 ஆம் ஆண்டில், முஸ்லிம்களுக்கு எதிரான மற்றொரு முக்கியமான வெற்றிக்குப் பிறகு, இந்த விழா முழு திருச்சபைக்கும் நீட்டிக்கப்பட்டது. 1913 ஆம் ஆண்டில், பத்தாம் பயஸ், அக்டோபர் 7 ஆம் தேதிக்கு விழாவை மாற்றினார். இன்று, இந்த விழா ரோமானிய காலண்டரில் சிறப்பான விழாவாக *Our Lady of Rosary* என்ற தலைப்பில் கொண்டாடப்படுகிறது.

இன்று, உலகளாவிய உடனடி தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் காரணமாக, எல்லா இடங்களிலும் உள்ள சமூகங்களையும் மக்களையும் பாதிக்கும் பல ஆன்மீக தீமைகளை நாம் நன்கு அறிவோம்: போர்கள், ஊழல், ஒழுக்கக்கேடான வாழ்க்கை, ஆடம்பரமான பாவங்கள், கொலைகள், திருட்டுகள், வெறுப்பு குற்றங்கள், ஒழுக்கச் சிதைவு, வறுமை மற்றும் இன்னும் பல. அத்தகைய தீமைகளை விமர்சித்து கண்டனம் செய்வதற்குப் பதிலாக, அந்த நோக்கங்களுக்காக ஜெபமாலை ஜெபிப்பது அவற்றை எதிர்த்துப் போராடுவதற்கான சிறந்த வழியாகும்.





போனேன். அங்கு போனால் அவர்களுக்கு நிறைய பிரச்சினைகள் இருக்கிறது ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று கூறினார்கள். ஆபரேஷன் தியேட்டருக்கு போனவர்கள் விரைவில் வரவில்லை. அவர்கள் பின்னே சென்றவர்கள் எல்லாம் அறுவை சிகிச்சை முடிந்து வந்து விட்டார்கள். நான் ஜீவ மாதாவிடம் ஜெபம் செய்து போராடினேன். அம்மாவுக்கு அறுவை சிகிச்சை நல்ல முறையில் முடிந்தது. மீண்டும் ஒரு வாரம் கழித்து உடல்நிலை சரியில்லை ரத்த வாந்தி எடுத்தார்கள். மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நான் போகவில்லை, மாதாவிடம் அழுது ஜெபித்தேன். நிறைய போராட்டங்கள் மத்தியில் அம்மா சுகம் பெற்றார். இயேசுவுக்கு புகழ்! மரியே வாழ்க!

4. என் பெயர் அந்தோணியம்மாள்: நான் இந்த ஆலயத்திற்கு 21 வருடமாக வந்து கொண்டிருக்கிறேன் நிறைய என் வாழ்க்கையில் அற்புதங்கள் நடந்தது. மாதாவின் அருளால் என் பேத்திக்கு பெண் குழந்தை பிறந்தது. பாப்பாவுக்கு யூரின் இன்பெக்சன் இருந்தது, மருந்து கொடுத்தும் சரியாகவில்லை. பங்கு தந்தை அவர்களிடம் என் விண்ணப்பத்தை எழுதிக் கொடுத்தேன், நானும் செபித்தேன் பாப்பாவுக்கு நல்ல சுகம் கிடைத்தது, மாதாவுக்கு நன்றி. இன்னொரு பேத்திக்கு திருமணமாகாமல் இருந்தது அதற்காக செபித்தேன் திருமணம் நல்லபடியாக முடிந்தது. என்னை இத்தனை வருட காலமாக ஆரோக்கியத்துடன் வாழ செய்த மாதாவுக்கு நன்றிகள் பல! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!.

**குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்**

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்பணி. லீபன் டேவிட். மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

செப்டம்பர் மாதம் 6 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசிரை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

1. என் பெயர் மோனிஷா: நான் கொடுங்கையூரில் இருந்து வருகிறேன் எனக்கு திருமணம் ஆகி மூன்று ஆண்டுகள் கடந்தும் குழந்தை இல்லை. வெளியே எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ள முடியவில்லை குழந்தை இல்லையா என்று நச்சரித்தார்கள். அதன் பிறகு என் சொந்தங்கள் மூலமாக ஜீவ மாதாவை பற்றி தெரிந்து கொண்டு அவரோடு வந்தேன். மூன்று மாதமாக தொடர்ந்து செபித்தேன் இந்த மாதம் சனிக்கிழமை வந்ததேன், அடுத்த நாள் எனது திருமண நாள், ஆகவே பங்குத்தந்தையிடம் ஆசிர்வாதம் வாங்க சென்றேன். பங்கு தந்தை என்னை ஆசீர்வதித்து உங்கள் திருமண நாளில் உங்களுக்கு மாதா குழந்தை வரம் கொடுத்து விட்டார்கள் என்று வளையல் தந்து அனுப்பினார். நான் நினைத்து கூட பார்க்கவில்லை அற்புதமாக எனக்கு குழந்தை வரம் கிடைத்தது. மழலை வரம் தந்த மாதாவுக்கு நன்றிகள் பல. இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

2. என் சொந்தக்கார பாப்பாவுக்கு திருமணம் ஆகி குழந்தை வரம் இல்லை. அதற்காக நான் மாதவிடாம் மனம் உருக மன்றாடினேன், மாதா மழலை வரம் தந்தார்கள். அதன் பிறகு என் மகனுக்கு திருமண வரம் இல்லாமல் இருந்தது நான் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானேன். என் மகனுக்கு திருமணம் நடக்கும் படியாக மாதவிடாம் மன்றாடினேன். மாதாவின் பரிந்துரையால் என் மகனுக்கு திருமணம் நடந்தது நல்ல மருமகள் கிடைத்தாள். அற்புதமாக என் வாழ்க்கையில் ஒளியேற்றிய அம்மாவுக்கு நன்றிகள் பல, இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

3. என் பெயர் கிரேசி: நான் 15 வருடமாக ஜீவமாதாவிடம் வருகிறேன், என் குழந்தைகள் அவர்கள் கொடுத்த வரம். என் அம்மாவுக்கு மூச்சு விட சிரமமாக இருந்தது அதனால் மருத்துவமனைக்கு அழைத்துப்





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



ஒரு பணக்கார வீட்டில் குதிரையும் ஆடும் இருந்தது. அந்த வீட்டின் முதலாளி குதிரையையும் ஆட்டையும் மிகவும் நேசித்தார். ஆகவே அவைகளுக்கு தேவையான உணவுகளை பார்த்து பார்த்து கொடுத்தார். இரண்டுமே கொழு கொழு என இருந்தது. ஒரு நாள் திடீரென்று குதிரை நோய்வாய்ப்பட்டது. முதலாளி அந்த ஊரில் இருக்கக்கூடிய கால்நடை மருத்துவர்கள் எல்லாரையும் கூட்டிக் கொண்டு வந்து மருத்துவம் பார்த்தார். ஆனால் அந்த குதிரைக்கு குணமாகவில்லை. ஒரு நாள், இரண்டு நாள், ஒரு வாரம், என்று மருத்துவம் கொடுக்கப்பட்டது, ஆனாலும் சரியாகவில்லை. இதனால் இந்த ஆடும் மிகவும் மனமுடைந்தது. இந்த முதலாளி, குதிரை இனி குணமாகாது ஆகவே அதைக் கொன்று விடலாம் என்று திட்டமிடுகிறார். இதை அறிந்த ஆடு “அய்யோ தன்னுடைய நண்பனை கொல்ல திட்டமிடுகிறார்களே” என்று வருத்தமடைந்தது. ஆடு குதிரையிடம் சென்று “எழுந்திடு எழுந்திடு” என்று குதிரையை “முட்டி முட்டி நீ எழுந்திரு இல்லையென்றால் உன்னை கொன்று விடுவார்கள்” என்று குதிரையின் காதில் சொல்லி இந்த குதிரையை எழுப்பிக் கொண்டிருந்தது. இந்த குதிரையும் மெல்ல மெல்ல குணமடைந்து எழுந்து நின்றது. இதை பார்த்த முதலாளிக்கு மிகவும் மகிழ்ச்சி, உடனே அந்த குதிரையின் பக்கம் சென்று குதிரையை தடவி கொடுத்து தன்னுடைய பாசத்தை வெளிப்படுத்தினார். தன்னுடைய உறவினர்களை அழைத்து என்னுடைய குதிரை குணமடைந்து விட்டது, அதை நான் கொண்டாட போகிறேன் என்று சொன்னார். குதிரையும் ஆடும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இந்த கொண்டாட்டத்திற்காக அனைவரும் வந்தனர். அப்போது முதலாளி “அந்த ஆட்டை அடித்து அனைவருக்கும் விருந்து கொடுங்கள்” என்று தன்னுடைய வேலை ஆட்களுக்கு கட்டளை பிறப்பித்தார். வேலையாட்கள் அந்த ஆட்டை பிடித்தார்கள், அதை வெட்டினார்கள், சமைத்தார்கள், அனைவரும் உண்டனர். குதிரை இறந்து விடக்கூடாது என்று பதறிப் போன ஆடு, அந்தக் குதிரை குணம் பெற்றவுடன் இது பலியாடாக மாறிவிட்டது. இதுதான் இன்றைய சூழலும், இன்றைய அரசியலும், இன்றைய சமுதாயமும், நமக்கு கொடுக்கும் பாடம். நல்லதே நினைப்பவர்களுக்கும் நல்லதை செய்ய துடிப்பவர்களுக்கும் கடைசியில் பரிசாக கிடைப்பது சிலுவை, துரோகம், வீழ்ச்சி. இந்த சூழ்ச்சிகளையெல்லாம் நாம் வெல்ல வேண்டுமென்றால் நமக்கு உதவியாக இருக்கின்ற ஒரு கருவி செபமாலை. செபமாலையில் நாம் மறையுண்மைகளை தியானிப்பதோடு, நாம் வாழ்கின்ற இந்த சமுதாயத்தில் நமக்கு எதிராக வருகின்ற தீய சக்திகளையும், தீய எண்ணங்களையும் வெற்றி கொள்கின்ற ஒரு கருவியாக இருக்கின்றது. ஆகவே அன்னையோடு இணைந்து தினமும் செபமாலை செபிப்போம்! வெற்றி வீரர்களாக நடை போடுவோம்!

# அன்னை மரியாவின் திருப்பயணங்கள்

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

## பயணம் மூன்று

### தொடக்கவுரை

புனித கன்னி மரியாவின் பயணங்களைத் தொடர்ந்து சிந்தித்தும் தியானித்தும் வருகின்றோம். இக்கட்டுரையில் நிறை கர்ப்பிணியான மரியா குடிமக்களுக்குரிய கடமைகளை நிறைவேற்ற புனித யோசேப்புடன் பயணிக்கின்றார். கலிலேயாவின் நாசரேத்திலிருந்து யூதேய நாட்டிலுள்ள பெத்லகேமுக்கு இப்பயணம் நடைபெறுகிறது. மிகவும் முக்கியமான பயணம். ஆனால் வெகு கடினமானது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இஸ்ரயேல் இனம் எதிர்பார்த்த மீட்பர் பிறக்கப் போகின்றார். அவர் எங்கு, எப்படி பிறப்பார் என்ற கேள்விகள் இந்த எளிய பெற்றோரின் உள்ளங்களில் எழுந்தாலும், இறைமகனை விண்ணகத்தந்தை பார்த்துக் கொள்வார் என்று நம்பிக்கையில் எளிமையான ஒரு பயணம் தொடர்கிறது. மரியாவின் மூன்றாவது பயணத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடங்கள் ஏராளம். அவற்றை நமது வாழ்வாக்குவோம். நமது அன்றாட பயணங்கள் மிக எளிதாக அமைய பல வகைகளில் திட்டமிடுகிறோம். இங்கு கழுதையின் மீது மரியா அமர்ந்திட, வளனார் நடந்து கொண்டு செல்கிறார். இக்காட்சியை மனதில் நிறுத்தியவர்களாய் இக்கட்டுரையினுள் நுழைவோம்.

### தூய கீழ்ப்படிதல்

மரியாவின் வாழ்வில் நாம் காண்பது அவரது தீவிரக் கீழ்ப்படிதல். தூய கீழ்படிதல். இறைமகனுக்குத் தாயாகும் பேற்றினை அன்போடு ஆகட்டும் என்று உரைத்து பணிந்தார். உமது உறவினரான எலிசபெத் முதிர்ந்த வயதில் கருவுற்றிருக்கிறார் என்ற வானதூதரின் கூற்றைக் கேட்டதும் அவருக்கு உதவிக்கரம் நீட்ட விரைந்து சென்றார். அன்னையைப் போன்றே வளனாரும் உரோமைப் பேரரசரின் கட்டளைகளுக்குப் பணிகின்றார். இரு நோக்கங்களுக்காக இப்பேரரசு மக்கள் தொகையைக் கணக்கிடுமாறு கட்டளை பிறப்பித்தது. ஒன்று: மக்களிடமிருந்து வரி வசூலிக்க. இரண்டு: நிர்வாகம் மிக எளிதாக அமைய. உரோமைப் பேரரசு மிகப் பெரிய வல்லமை பொருந்தியதாக இருந்தது. மக்கள் வரிச்சுமையால் மிகவும் அவதியுற்றனர். எனவே இந்த மக்கள் கணக்கெடுப்பு கூட தீவிரவாதிகளால் எதிர்க்கப்பட்டது என்ற குறிப்பைத் தெரிய வருகிறோம்.

நிறை கர்ப்பிணியான மரியாவை வளனார் எத்தகைய மனநிலையுடன் அழைத்துச் சென்றிருப்பார் என்று சிந்தனை செய்யலாம். அவரும் கனவுகள் வழியே இறைவனுக்குத் தமது தூய கீழ்ப்படிதலை எண்பித்தவர். இப்போது அதே மனநிலையுடன் உரோமை அரசரின் சட்டத்தை நிறைவேற்றப் புறப்படுகின்றார். கடவுளுக்கு உரியதை கடவுளுக்கும் செசாருக்கு உரியதை செசாருக்கும் செலுத்துங்கள் என்று பிற்காலத்தில் போதிக்கும் இயேசுவும் தம் பெற்றோரின் கீழ்படிதலைக் கண்டு மகிழ்ந்திருப்பார். ஆன்மிகக் கடமைகளோடு குடியுரிமைக் கடமைகளையும் நிறைவேற்ற அனைவரும் அழைக்கப்படுகிறோம் என்பதை இந்த தூய பெற்றோர் நமக்கு உணர்த்துகின்றனர். இறைவனின் தாயாக இருந்தாலும் அவர் இன்றைய





கடவுளின் குரலுக்கு கீழ்படிய மறந்து போகிறாள் என்று தெளிவுபடுத்துகிறார். பாம்பு பெண்ணிடம் நீங்கள் சாக மாட்டீர்கள் (தொ.நூ.3:4) என்ற பாம்பின் பொய் வாக்குறுதியான இறை வார்த்தையை, புனித சிரில் "அருள்மிகு பெற்றவரே வாழ்க ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்ற கபிரியேல் வானத்தூதரின் வார்த்தையின் பின்புலத்தில் உள்ள தந்தையாம் கடவுளின் உண்மையான வாக்குறுதிக்கு கீழ்ப்படிந்து போகும் அன்னை மரியாவின் தாழ்ச்சி நிறைவாழ்வோடு கீழ்ப்படியும் வாழ்வோடு ஒப்புமைப்படுத்துகிறார்.

### அக-வாழ்வும் புற-வாழ்வும்

பழைய ஏவாள் பாம்பின் கவர்ச்சி நிறைந்த வார்த்தைகளை கேட்டு தன் புறக்கண்களால் பார்த்து பாம்பின் மாய கவர்ச்சியில் வீழ்கிறார், ஆசைப்பட்டு பழத்தை பறித்து உண்கிறார், ஆக பழைய ஏவாள் புற வாழ்வை சார்ந்தவர் என சித்தரிக்கிறார். அன்னை மரியா அகவாழ்வை சார்ந்தவர் என புனித சிரில் எடுத்துரைக்கிறார். மரியா இந்நிகழ்ச்சிகளை எல்லாம் தம் உள்ளத்தில் இருத்தி சிந்தித்துக் கொண்டிருந்தார் (லூக்கா 2:19) என்ற இறை வார்த்தையை மேற்கோள் காட்டி அன்னை மரியா அகவாழ்வை சார்ந்தவர் என சிறப்பிக்கிறார். பழைய ஏவாள் தன் கண்களால் ஆசையாய் வீழ்ந்த வீழ்ச்சியை, அன்னை மரியா தமது அகவாழ்வில் வாழ்ந்து மீட்டெடுக்கிறார். கப்ரில் தூதர் மூலமாக கேட்ட இறை வார்த்தையை தம்முடைய செவிகளால் கேட்டு அக வாழ்வுக்கு எடுத்துச் சென்று வாழ்ந்து கிறிஸ்துவை தமது அக வாழ்வால் பெற்றெடுத்தார் என்று அன்னை மரியாவை பார்த்து கொஞ்சம் புனித சிரில் பெருமைப்படுகிறார்.

### பழைய ஏவாளின் உண்மைத் தோற்றம்

ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச் செய்து, அவன் உறங்கும் பொழுது அவன் விலா எலும்பு ஒன்றை எடுத்துக்கொண்டு எடுத்த இடத்தை சதையால் அடைத்தார். ஆண்டவராகிய கடவுள் தாம் மனிதனிடமிருந்து எடுத்த விலா எலும்பை ஒரு பெண்ணாக உருவாக்கி மனிதனிடம் அழைத்து வந்தார், (தொடக்க நூல் 2:21-22) இந்த இறை வார்த்தையை மேற்கோள் காட்டி புனித சிரில் பழைய ஏவாளின் பிறப்பை பற்றி கூறுகிறார். ஆகவே பழைய ஏவாளை எந்த ஒரு பெண்ணும் கருத்தரிக்கவில்லை என்றும், அவள் ஆதாமிடமிருந்து வந்தார் என்றும் இறை வார்த்தையின் அடிப்படையில் கூறுகிறார். புனித ஏவாளாகிய அன்னை மரியா தூய ஆவியாரின் நிழலால் கருவுற்று கிறிஸ்துவை பெற்றெடுத்தார். பழைய ஏவாள் பழைய ஆதாமிடமிருந்து வந்து பாவத்தைப் பெற்று தந்தார். புதிய ஏவாளாகிய அன்னை மரியா தூய ஆவியின் தூண்டுதலால் புதிய ஆதாமாகிய கிறிஸ்துவை பெற்றெடுத்து, பழைய ஏவாளும் ஆதாமும் பெற்று தந்த பாவம் என்ற கடன் சீட்டை, தன் மகன் வழியாக, தம் மகன் சிந்திய இரத்தத்தின் வழியாக தீர்த்து வைத்தார் என்று ஆழமான இறையில் சிந்தனையோடு புனித சிரில் எடுத்துரைக்கிறார்.

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருட்பணி. டோமினிக் ஜான் பால் ம.ஊ.ச
சென்னை

25



சென்ற மாத இதழில் இறைமகன் இயேசுவின் மனிதத்தன்மை மற்றும் இறைத்தன்மை சார்ந்த கருத்துக்களை புனித சிரில் எடுத்துரைத்தது குறித்து வாசித்து தியானித்தோம். இந்த மாத கட்டுரையில் அன்னை மரியாவையும் பழைய ஏவாளையும் இணைத்து கூறும் கருத்துக்களை கவனமாக படிப்போம்.

## 1. அன்னை மரியா "கடவுளின் தாய்"

அன்னை மரியாவை குறித்து புனித சிரில் வழங்கிய கருத்துக்கள் அழுத்தம் திருத்தமாக அமைகிறது. 431 ஆம் ஆண்டு நடந்த எபேசு பொதுச் சங்கத்தில் இயேசுவின் இறைச்சாயல் மற்றும் மனிதச்சாயல் ஆகிய இரண்டு தன்மைகளை ஒன்றிணைந்து அதில் அன்னை மரியாவின் தலைப்பான "கடவுளின் தாய்" என்று பிரகடனம் செய்த தன்மையிலும், இவரது கண்டிப்பு தன்மை மேலும் இருப்பதை இவரது வார்த்தை தன்மையின் அழகினைக் கொண்டே கூறிவிடலாம், அந்த அளவுக்கு இவரது உரையில் அழுத்தம் இருக்கின்றது.

## அன்னை மரியாளின் தாய்

அன்னை மரியா பெற்ற சலுகைகளில் சிறப்பானது "இறையருள்" என்று புனித சிரில் வாதித்திருக்கிறார். அன்னை மரியாவையும் பழைய ஏற்பாட்டு ஏவாளையும் இணைத்து பார்த்து இந்த "இறையருள்" பற்றிய தகவல்களை தெளிவு படுத்துகிறார். பழைய ஏவாள் கன்னியாக இருந்து சாவை பெற்று எடுத்தார் என்று கூறி, 'அன்னை மரியா' பற்றி கூறும்போது பெருமைப்படும் விதமாக அன்னை மரியாவும் கன்னியாக இருந்து இறையருளால் வாழ்வை பெற்றெடுத்தார், வாழ்வாகிய கிறிஸ்துவை பெற்றெடுத்தார் என்று தமது இரண்டாவது உரையில் ஆணித்தரமாக அடித்து சொல்கிறார்.

பழைய இயல்பால் சாவை பெற்றுக் கொடுப்பதற்கு பாம்பின் மாயக் கவர்ச்சியில் சாய்ந்தது போல் அன்னை மரியாவும் கபிரியேல் தூதரின் மாய கவர்ச்சியில் சாய்ந்து "இயேசுவை" வாழ்வை பெற்றுக் கொடுத்தார் என்று அன்னை மரியாளுக்கும் பழைய ஏவாளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை புனித சிரில் தெளிவுபடுத்துகிறார். அன்னை மரியாவையும் பழைய ஏவாளையும் வேறுபடுத்தி காட்டும் தன்மையில் புனித சிரில் ஆழமாக சென்று விவரிக்கிறார். பாம்பின் தலையை நசுக்குதல் என்று இறைவார்த்தையில் இருந்தாலும் புனித சிரில் பாம்பின் பொய்மை வாக்குறுதிகளை முன்னிலைப்படுத்துகிறார். பாம்பின் பொய்யான வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்ட பழைய ஏவாள் தந்தையாம்





சமுதாயத்திற்கு ஒரு மேல் வரிச்சட்டமாகவே விளங்குகின்றார். வளனாரும் கூட இப்பொறுப்பினை மிக அருமையாக செய்து முடிக்கின்றார். இன்று நாம் சட்ட திட்டங்கள் அற்ற, கட்டுப்பாடு அற்ற ஒரு நிலையே சுதந்திரமான வாழ்வு என்று நினைக்கின்றோம். இந்த மனநிலை நமது அடிமைத்தனத்தைக் காட்டுகிறது. நாம் அகச் சுதந்திரம் இன்றி செயல்படுகிறோம். எதைச் செய்தால் நன்மை ஏற்படுமோ அதைச் செய்வது சுதந்திரம். எனவே சட்ட திட்டங்கள் திருஅவை நமக்குக் கொடுத்ததாக இருக்கலாம். அல்லது இந்த அரசு வழங்கியதாக இருக்கலாம். திருஅவையின் உறுப்பினர்கள், கிறிஸ்து என்ற மறை உடலின் உறுப்பினர்கள் என்ற மனநிலையில் திருஅவைக்குப் பணிவோம். நமது குடியுரிமைச் சட்டங்களை மதிப்போம். மகிழ்வுடன் சுதந்திரத்துடன் வாழ்வோம்.

**மூன்றாவது பயணம்**

முதல் இரண்டு பயணங்களைப் போன்றே இதுவும் ஒரு மகிழ்வான பயணம். ஏனெனில் மெசியா ஒரு குழந்தையாக இம்மண்ணில் உதிக்கப் போகின்றார். அவரது பிறப்பைப் பற்றி முன்னறிவிக்கப்பட்ட இறைவாக்குகள் அனைத்தும் நிறைவேறுகின்றன. 'தாவீதின் வழிமரபினரான யோசேப்பும், தமக்கு மண ஒப்பந்தமான மரியாவோடு, பெயரைப் பதிவு செய்ய கலிலேயாவிலுள்ள நாசரேத்து ஊரிலிருந்து யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்றார்" என்று லூக்கா தமது தூய நற்செய்தியில் அழகாகக் கூறுகிறார். பெத்லகேம் அந்நாளில் தாவீதின் நகர் என்று அழைக்கப்பட்டது. யோசேப்பு தாவீதின் வழிமரபினர். எனவே இந்நாளில் தனது பெயரைப் பதிவு செய்ய வேண்டியிருந்தது. இவ்வாறு இறைவாக்கினர் மீக்காவின் வாக்கு நிறைவேறியது.

*யூதா நாட்டு பெத்லகேமே,*
*யூதாவின் ஆட்சி மையங்களில்*
*நீ சிறியதே இல்லை*
*ஏனெனில் என் மக்களாகிய இஸ்ரயேலை ஆள்பவர் தோன்றுவார்*
*ஒருவர் உன்னிலிருந்தே தோன்றுவார்"*

இயேசு பிறக்க வேண்டிய நாளின் அருகில் அகுஸ்து சீசர் இக்கட்டளையைப் பிறப்பித்தது மிகவும் பொருத்தமானது. இந்தப் பயணம் ஒரு வாரம், நான்கு நாட்கள் நீடித்திருக்கும் என்று சொல்லப்படுகிறது. மிகவும் கடினமான பயணம். கள்வர், கொடிய மிருகங்கள் நடமாடும் பகுதி, மலை மீது ஏற வேண்டியிருந்தது. நிறைமாத கர்ப்பிணியான மரியாவுக்கு இது மிகவும் கடினமான பயணமே. குளிர் காலம், மழைக் காலமும் கூட. எனவே வெப்ப சீதோஷ ஆடைகளை எடுத்துச் சென்றது இன்னும் அவர்களின் சுமையை அதிகரித்திருக்கும். இத்தகைய இடர்பாடுகளை மரியாவும் யோசேப்பும் அமைந்த மனதுடன் ஏற்றுக்கொண்டனர். தங்களின் துன்பங்களை இறைவனும் பார்த்துக் கொண்டே இருக்கிறார். அவரில் நம்பிக்கை கொண்ட இறையடியார்களோடு இறைவனும் பயணிக்கின்றார். அனைத்தையும் தாங்குவதற்கு சக்தி தருகின்றார் என்ற உறுதியான மனநிலையில் அவர்களது பயணம் பெத்லகேம் அடைகிறது. சிறிய ஊர். ஆனால், அது மீட்பர் பிறப்புக்குப் பின் உயர் புகழ் பெற்ற புனித இடமாக மாறப் போகிறது என்பதை இறைவன் ஒருவரே அறிந்திருந்தார்.

**இறைவனுக்கு இடம் கிடைக்கவில்லை**

நாசரேத்து இயேசு என்ற படத்தில் நாம் காண்பது என்ன? மரியாவும் யோசேப்பும் வீடு வீடாக, விடுதிதோறும், வழியில் காணும் மக்களிடத்திலும் இயேசு பிறக்க இடம் கேட்டு அலைகின்றனர். உலகைப் படைத்தவருக்குப்

பிறப்பதற்கு இடம் கிடைக்கவில்லை. பெற்றோர் கவலைப்படவில்லை. மரியாவிற்கு பேறுகால வேதனை நெருங்குகிறது. இறுதியில் கிடைத்தது மாட்டுத் தொழுவம். அவர்தம் தலைமகனைத் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினர். லூக்காவின் இவ்வரிகளை படிக்கும்போது நம் கண்களில் ஈரம் கசிகின்றது. இப்பிறப்பின் வழியாக விண்ணகத்தந்தை நமக்கு கூறுவது என்ன? எளிமையான வாழ்வு, ஏழைகளோடு தோழமை உறவு கொண்ட வாழ்வு, செல்வங்களை இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளும் வாழ்வு. நமது மனநிலை என்ன? பகிர்வு இல்லாததால் இன்று நாட்டிலும் வீட்டிலும் வறுமை, அமைதியின்மை, திருடு, பயம் போன்ற சூழல்கள் உருவாகின்றன.

மாட்டுக் குடிலின் நிலை வெகு விரைவில் மாறுகிறது. பிறந்த பாலனை ஆராதிக்க எளிய இடையர்கள் வருகின்றனர். இவர்களுக்கு முதன் முதலில் மீட்பின் செய்தி அறிவிக்கப்படுகிறது. பேறுபெற்ற இடையர்கள் இயேசு பிறந்த செய்தியைக் கூறிய பின் இறுதியில் வானதூதரின் முடிவுரை மிகவும் ஆழ்ந்து சிந்திக்கக்கூடியது. குழந்தையை துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம். ஆடு, மாடுகள் தின்னும் புல், வைக்கோல் போன்ற உணவுகள் போடப்படும் தீவனத்தொட்டியில் உலக மீட்பர் கிடத்தப்பட்டிருக்கிறார். அருகிலுள்ள கால்நடைகள் உற்றுப் பார்க்கின்றன. இடையர்கள் விண்ணகத் தூதரணியின் புகழிசையைக் கேட்கின்றனர். விரைகின்றனர் குழந்தையைத் தரிசிக்க. இயேசு முதன்முதலாய் தன்னை எளியவருக்கு வெளிப்படுத்துகின்றார். ஆம், நெஞ்சிலே செருக்குற்றோரை அவர் சிதறடிப்பார். எட்டு நாட்கள் சென்ற பின் குழந்தைக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டு, இயேசு என்ற பெயரும் இடப்பட்டது. இவ்வாறு அன்னையின் மூன்றாவது பயணமும், அதில் நடந்த நிகழ்வுகளும் நமது வாழ்வுக்குச் சிறந்த பாடங்களாக அமைகின்றன.

## அன்னை தரும் செய்தி

நமது பயணங்கள் எப்போதும் இனிதாக முடிவதில்லை. நமது வாழ்க்கையே ஒரு பயணம். அதில் ஏற்றமும் இறக்கமும், உயர்வும் தாழ்வும், மகிழ்வும் துக்கமும் நிறைந்திருந்தால் தான் அது சுகமாக இருக்கும். எப்போதும் குறைவில்லாமல் இருந்தால் நாம் இறைவனைத் தேடாமல் போய்விடுவோம். எப்போதும் சோகமும் துன்பங்களும் நம் வாழ்வில் நீடித்து இருப்பது இல்லை. இறைவன் நம்மை முழுவதுமாகக் கைவிடமாட்டார். அனைத்திற்கும் மேலாக நாம் விண்ணகப் பயணம் பற்றியும் கவலைப்பட வேண்டும். வானகமே நமது தாய்நாடு. இவ்வுலகில் நாம் மேற்கொள்ளும் பயணங்கள் ஒவ்வொன்றும் மறுமையை உணர்த்திக் காட்டுகிறது. எனவே எதுவும் இங்கு நிரந்தரமல்ல. இறைவனும் அவரைச் சார்ந்த காரியங்களுமே நிரந்தரமானது. நிலையானது.

உரோமையில் ஆட்சிக்கு உட்பட்டவர்கள் என்ற முறையில் இயேசுவை பெற்றோர் இவ்வுலகக் கடமைகளை முழுமனதுடன் நிறைவேற்றுகின்றனர். மரியா நிறை கர்ப்பிணி. வழியில் பேறுகாலம் நிகழலாம். ஆயினும் சட்ட திட்டங்களுக்குப் பணியும் மரியாவும் வளனாரும் நமக்குக் கற்றுத்தரும் பாடம் என்ன? சட்ட திட்டங்கள், பத்துக் கற்பனைகள், திருஅவை கட்டளைகள் அனைத்தையும் கிறிஸ்தவர்களாகிய நாம் நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். அவைகள் கடினமாக இருக்கலாம். ஆனால் நாம்

தொடர்ச்சி 27 ம் பக்கம்...........





சொல்லபட்ட வாழ்த்து தந்தையாம் இறைவன் அன்னை மரியாவுக்கு சொன்ன வாழ்த்து. அந்த வாழ்த்து சொல்லப்பட்ட போது மோட்சமே வானிலிருந்து கீழே இறங்கி வந்து அன்னை மரியாவின் உள்ளத்தில் குடிகொண்டது. வார்த்தையான இறைவன் மனுவுருவானார். மனிதனை மீட்க கடவுளின் இரக்கம் எந்த அளவிற்கு செயல்பட்டது என்றால் மாட்சியும் மகத்துவமும் நிறைந்த இறைவன் தன்னை வெறுமையாக்கி கன்னி மரியிடம் மனித உடலெடுத்தார். அத்தகைய அருமையான வாழ்த்தைத்தான் நாம் தினமும் செபிக்கும் செபமாலையில் செபிக்கின்றோம். அவ்வாறு நாம் அன்னையை வாழ்த்தும் போது அன்னையும் எலிசபெத்தை வாழ்த்தியபோது என்ன நடந்ததோ அதுவே நம் வாழ்விலும் நடக்கும். லூக்:1:41 இல் மரியாளின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார், என்று வாசிக்கின்றோம். அவ்வாறெனில் நாம் வானதூதரின் மங்களவார்த்தையால் அன்னை மரியாவை வாழ்த்தும் போது அன்னை மரியாவும் நம்மைப் பார்த்து வாழ்க மகனே! வாழ்க மகளே! என்று நம்மை வாழ்த்துவார்கள். அப்போது நம்மில் மகிழ்ச்சி நிறையும். ஏலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் நிரப்பப்பட்டது போல நாமும் தூய ஆவியால் நிரப்பப்படுவோம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. எனவே தூய ஆவியை பெற்றுக் கொள்வதற்கு மிகச் சிறந்த வழி செபமாலை செபிப்பதே ஆகும்.

## என்னுடைய சாட்சி:

எனக்கு 1995 ஆண்டு பிப்ரவரி மாதம் திருமணம் நடைபெற்றது. அந்த ஆண்டு அக்டோபர் மாதம் செபமாலை மாதாவின் வணக்கமாதமாக இருப்பதால், நானும் என்னுடைய மனைவியும் இணைந்து 153 மணி செபமாலை தினமும் செபிப்பது என்று தீர்மானம் செய்து, அக்டோபர் மாதம் முழுவதும் நான் முழங்காலில் இருந்தும், என்னுடை மனைவி முடியும்போது முழங்காலில் இருந்தும் மேலும் நான் அக்டோபர் மாதம் முழுவதும் பிற்பகல் 12 மணி வரை உபவாசமிருந்தும் 153 மணி செபமாலை செபித்து வந்தோம். நாங்கள் வைத்த செபக்கருத்து சொந்த வீடு அல்லது அரசு வேலை. ஆனால் இறைவன் எங்கள் இரண்டு வேண்டுதல்களையும் நிறைவேற்றிக் கொடுத்தார். அதே ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் தேதி சொந்த வீடு அன்னை மரியாள் எங்களுக்கு வாங்கிக் கொடுத்தார். பின்னர் 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அரசு வேலையில் என்னை சேர்த்துவிட்டார். ஒரு மாதம் பக்தியுடன் தேவ இரகசியங்களை தியானித்தபடியே செபமாலை செபித்ததற்கு இவ்வளவு நன்மைகள் கிடைத்ததென்றால் தொடர்ந்து செபித்தால் எவ்வளவு நன்மைகள் கிடைக்கும் என்பதை சிந்தியுங்கள். அன்னை மரியாள் அதிகம் விரும்பும் செபமாலையை பக்தியோடு செபித்து அன்னையின் ஆசீரை பெற்றுக்கோள்வோம்.

மரியே! ஜெபமாலை மாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!



## பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் 12

திரு. தா.சுரேஷ், பூம்பொழில் நகர், சென்னை

அன்னை மரியாவை பிள்ளைக்குரிய பக்தியோடு நேசித்து வரும் நாம் அக்டோபர் மாதத்தில் ஜெபமாலை அன்னை என்று போற்றப்படுகின்ற நம் அன்னை மிகவும் விரும்புகின்ற ஜெபமாலை பற்றியும், ஜெபமாலை செபித்ததால் பெற்றுக்கொண்ட நன்மைகள் பற்றியும் சிந்திக்க அழைக்கின்றேன்.

### ஜெபமாலை பக்தியின் அவசியம்:

பாவத்தால் தூண்டப்பட்டுள்ள கடவுளின் கடுஞ்சினத்தை சாந்தப்படுத்தவும், மிகவும் துன்பத்திலிருப்பவர்களுக்குத் தேவையான ஆன்ம ஆரோக்கியத்தைப் பெற்றுத் தரவும் பக்தியுள்ள நிலையான செபம் அவசியம். அதில் கிறிஸ்தவ வாழ்வின் கடமைகளை அனுசரிக்கும் தாகமும் சேர்ந்திருக்க வேண்டும். இவை அனைத்தும் பரிசுத்த ஜெபமாலையில் எளிமையாக நமக்கு கிடைக்கின்றன. நீங்கள் கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளாய் அவரைப் போல் ஆகுங்கள் (எபே:5:1) என்று புனித பவுல் கூறுகிறார். இதற்கு சிறந்த வழி மறை உண்மைகளை தியானித்து ஜெபமாலை செபிப்பதே சிறந்த வழியாகும். நீங்கள் எதுவாக நினைக்கின்றீர்களோ அதுவாகவே மாறுகின்றீர்கள் என்று உலக ஞானம் கூறுகிறது. அப்படியானால் ஜெபமாலையில் மறை உண்மைகளை தியானித்தபடி செபிக்கும்போது இயேசுவின் பிறப்பு, வாழ்வு, பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றை ஒவ்வொரு நாளும் தியானிக்கிறோம். அப்படி இயேசுவின் வாழ்வை தியானிக்கும் போது நாமும் இயேசுவாகவே மாறுகிறோம். எனவே ஜெபமாலை பக்தி ஒவ்வோரு கத்தோலிக்க நம்பிக்கையாளருக்கும் மிகவும் அவசியமாகும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

### இறைவார்த்தையின் ஒளியில் ஜெபமாலை:

ஜெபமாலையில் நாம் பயன்படுத்தும் செபங்கள் அனைத்தையும் நாம் அறிந்திருக்கிறோம். அதில் கர்த்தர் கற்பித்த செபத்திற்கு அடுத்தபடியாக மங்கள வார்த்தை செபத்தில் எவ்வளவு சிறப்புகள் உள்ளன என்று சற்று சிந்திப்போம். லூக்கா நற்செய்தி 1:26-45 வரை உள்ள இறைவார்த்தைகளை வாசித்து சிந்திக்கும் போது பல புரிதல்களை நாம் பெற்றுக்கொள்ளலாம். கடவுள் கபிரியேல் வானதூதரை மரியாவிடம் அனுப்பி அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்முடனே! என்ற வாழ்த்தை கூறியவுடனே வார்த்தையான இறைவன் மரியாவின் வயிற்றில் மனுவுருவானார். அதே வாழ்த்தை நாமும் அன்னை மரியாவை நோக்கிச் சொல்லும்போது என்ன நடக்கும்? வானதூதரால்





# அன்னையின் 81 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



### அன்னை மரியாள், விண்ணக்கத்தின் பலிபீடம், ஆலயம் காம்பிதோலியோ, உரோமை

கான்ஸ்டன்டைன் மன்னின் மதசகிப்புத்து தன்மைக்கு பிறகு கிறிஸ்தவர்களின் தலைமைப்பீடமாக உரோமை நிலைபெற ஆரம்பித்தது. வேதசாட்சிகளின் இரத்தத்தின் மீது கட்டப்பட்ட திருஅவையில், திருத்தந்தையர்களுக்கு தரப்பட்ட முக்கியத்துவமும், மரியாதையும் உரோமையில் கிறிஸ்தவர்களின் வளர்ச்சிக்கு வித்திட்டது எனலாம். கிறிஸ்தவர்களின் கூட்டுவழிப்பாட்டுக்காக ஆலயங்கள் கட்டப்பட்டன. அதிகாரத்தில் இருந்தவர்கள், வசதி படைத்தவர்கள் தங்களுக்கு இறைவன் செய்த நலன்களுக்கு நன்றி செலுத்துவதற்காக ஆலயங்களை கட்டினர். இவ்வாறாக, உரோமை நகரில் பல்வேறு இடங்களில் ஆலயங்கள் கட்டப்பட்டன. பல நேரங்களில் இவ்வாலயங்கள், பழைய உரோமை கடவுள்களுக்கு கட்டப்பட்டிருந்த ஆலயங்கள் இடிக்கப்பட்ட இடங்களில் கட்டப்பட்டன. இங்ஙனம், திரும்புகிற இடமெல்லாம் ஆலயங்களை காண்பது இன்றளவும் நீடிக்கிறது.

மேலும், ஒவ்வொரு நகரசபையும் தன் தலைமைப்பீடத்திற்கு அருகில் ஆலயம் இருப்பதை தங்களுக்கு நன்மை பயப்பதாக கருதின. அவ்வகையில், அன்னை மரியாள், விண்ணக்கத்தின் பலிபீடம், ஆலயம் உரோமை பெருநகர தலைமைப்பீடத்தின் ஆலயமாக இன்றளவும் உள்ளது. இந்த ஆலயம், உரோமை நகரின் மையப்பகுதியில்

நகரசபை அமைந்துள்ள காம்பிதோலியோ என்ற பகுதியில் உள்ளது.

இவ்வாலயத்தைப்பற்றி பல்வேறு பாரம்பரிய செய்திகள் இருந்தாலும், வரலாற்று ரீதியாக, கி.பி. 574ஆம் ஆண்டு குறிப்புகளின்படி, இவ்வாலயமானது பழமையான பைசாந்திய துறவற இல்லம் இருந்த இடத்தில் கட்டப்பட்டிருக்கிறது. முதலில் கட்டப்பட்ட ஆலயத்தைச் சுற்றிலும் பல்வேறு கடைகளும், சந்தைகளும் உருவாயின. இச்சந்தடியிலிருந்து விலகியிருக்க, இவ்வாலயத்தின் ஒரு பகுதி அடைப்பட்ட துறவற இல்லமாக உருவெடுத்தது. தொடக்க காலத்தில் பைசாந்தியர்களின் வழிபாட்டு முறைகளை பின்பற்றி இவ்வாலயத்தில் கிரேக்க மொழியும், கிரேக்க வழிபாட்டு முறைகளும் கடைபிடிக்கப்பட்டு வந்தன. ஆரம்பத்திலிருந்தே இவ்வாலயமானது, காம்பிதோலியோ அன்னை மரியாள் ஆலயம் என்றழைக்கப்பட்டது.

9ஆம் நூற்றாண்டில் திருத்தந்தை இந்த ஆலத்தை தன் ஆளுகைக்கு, அதாவது லத்தீன் ரீதிக்கு, உட்பட்டதாக மாற்றி, அதை பெனடிக்கட துறவியர் பராமரிப்பிற்கு ஒப்படைத்தார். கி.பி. 1250ஆம் ஆண்டு சிறப்பு ஆணை மூலம் திருத்தந்தை இந்த ஆலயத்தை பிரான்சிஸ்கன் துறவியர் வசம் ஒப்படைத்தார். பிரான்சிஸ்கன் துறவியர் பராமரிப்பில் இந்த ஆலயம் ரொமென்ஸ்கோ-கோதிக் வடிவ கட்டகலையில் புதுப்பிக்கப்படலாயிற்று. ஆலயத்தின் மையப்பகுதியானது, இருபுறமும் உள்ள பக்கவாட்டு பகுதியிலிருந்து ஒரு வளைவின் மூலம் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவுகளை



உயர்ந்த தூண்கள் மூலம் பிரித்திருக்கிறார்கள். ஆனால், ஒவ்வொரு தூணும் ஒவ்வொரு வடிவில் உள்ளன. அதற்கு காரணம், இத்தூண்கள் அனைத்தும் பழைய உரோமை இடிபாடுகளிலிருந்து மீட்டெடுக்கப்பட்டவை ஆகும். இப்படி மீட்டெடுக்கப்பட்ட தூண்கள் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. மத்திய காலங்களில் இவ்வாலயமானது உரோமை நகரின் ஆன்மீக, சமூக வாழ்வின் மையமாக மாறியது. புதிய குடியரசு முறைகள் சோதிக்கப்பட்ட காலத்தில் இவ்வாலயத்தின் பங்கு முக்கியமானதாகும். கி.பி. 14ஆம் நூற்றாண்டில் ரியன்சோவைச் சார்ந்த கோலா தன்னையே உரோமை குடியரசின் தலைவராக





8-ம் பக்க தொடர்ச்சி.........

மகிழ்வாக, அமைதியாக, சுதந்திரமாக வாழ இவைகள் பெரிதும் உதவுகின்றன. ‘திருச்சட்டத்தை நிறைவேற்றவே நான் வந்தேன்” என்று இயேசு கூறினார். அவருடைய பெற்றோர் அரச சட்டங்களையும், மோசேயின் திருச்சட்டத்தையும் நிறைவேற்றி, இறைவனுக்குப் பிரியமானவர்களாய் நேரிய வழியில் நடக்கின்றனர்.

அன்னை மரியாவும் தந்தை வளனாரும் ஏழ்மை வாழ்வை நேசித்தவர்கள். எளிய கோலத்தில் மெசியா பிறந்திருந்தாலும் அவர்கள் இந்நிலையை அமைந்த மனதுடன் ஏற்றுக் கொண்டனர். இதுதான் இறைவனின் திருவுளம் என்பதை உளமார உணர்ந்தனர். அவருக்குப் பணிந்தனர். எளிய கோலத்தில் பிறந்த இயேசுவை எளிய இடையர்கள் முதலில் சந்திக்கும் பாக்கியத்தைப் பெற்று மகிழ்ந்தனர். மூன்று ஞானிகள் தரிசித்த போதும் வியப்படைந்தனர். மாட்டுக் குடிலில் இறைவன் முன் நடைபெறும் அதிசயங்கள் ஒவ்வொன்றையும் மரியா தன் உள்ளத்தில் வைத்து சிந்தித்தார், தியானித்தார். ஆகட்டும் ஆகட்டும் என்ற குரல், அவர் இதயத்தில் ஒலித்துக் கொண்டே இருந்தது. இடையர்கள் மத்தியில் வானதூதர் புகழ் கீதம் இசைத்ததை நாம் நற்செய்தியில் வாசிக்கிறோம். நிச்சயமாக, முதலில் வானவர் கீதம் இயேசு பிறந்த குடிலில் தான் ஒலித்திருக்க வேண்டும். எனவே ஒரு புறம் இயேசு பிறப்பதற்கு ஒரு வீடு கிடைக்கவில்லையே என்ற ஏக்கமும் கவலையும் மரியாவை ஆட்கொண்டிருந்தாலும், அவரின் பிறப்பிற்குப் பின் நடந்தேறும் தெய்வீக செயல்கள் இறைவனின் பிரசன்னத்தை, உடனிருப்பை உணர்த்தி நின்று நிற்கின்றன. தெய்வீக அமைதியும் மகிழ்வும் அவ்விடத்தைச் சுற்றி நிலவியது. அது மெதுவாக உலகை நோக்கி நல்மனம் கொண்ட அனைவர் மீதும் தங்கியது.

**நிறைவுரை**

அன்னை மரியாவின் மூன்றாவது பயணம் சவால்கள் நிறைந்ததாக இருந்தாலும் விரைவில் மீட்பரின் பிறப்பால் அகில உலகம், ஏழை, படித்த ஞானியர் அனைவரும் மகிழ்கின்றனர் என்பதற்கு அடையாளமாக இடையர்களும் ஞானிகளும் இயேசுவைத் தரிசித்துச் செல்கின்றனர். இயேசுவும் எளிய வாழ்வு வாழ்ந்து, ஏழைகளோடு தோழமை உறவு கொண்டு, அவர்களின் சார்பாக உழைப்பார். ஆனால், அவரைப் போல் ஞானமும் அறிவும் மிக்கவர் யாரும் இலர் என்பதற்கு அடையாளமாக, ஞானிகளும் மாட்டுக் குடிலுக்கு வருகை புரிகின்றனர். எங்கும் நிறைந்த இறைவன் நங்கை உதரம் ஒடுங்கி, வளர்ந்து, பெத்லகேமை நோக்கிப் பயணித்து, இறைவாக்கு நிறைவேற அங்கு குழந்தையாக உதித்தார். நாமும் இறைவார்த்தையை நம்புவோம். அது நம்மில் மனுவுரு எடுக்கட்டும். இயேசுவுக்குச் சான்று பகரும் வகையில், நமது வாழ்வும் செயல்பாடுகளும் அமையும் போது, இயேசு ஒவ்வொரு நாளும் நம்மிலும் பிறப்பார். ஒவ்வொரு நாளும் நற்கருணை அருந்தும் போது இயேசு நம்மில் பிறக்கின்றார். அவரோடு அவரில் அன்றாட வாழ்வு பயணம் தொடர வேண்டும். அப்போது எதிர்நோக்கின் திருப்பயணம், நம்பிக்கை நிறைந்ததாய் மற்றவருக்கு, கிறிஸ்துவின் ஒளியை உணர்த்துவதாய் அமையும். மரியாவின் வாழ்வு பிறரின் வாழ்வில் நம்பிக்கை ஒளியை ஏற்றுவதாகவே அமைந்திருந்தது. நாமும் ஏழைகள், தேவையில் இருப்போர், நோயுற்றோர் அனைவரின் வாழ்வில் நம்பிக்கை தீபத்தை ஏற்றுவோம். நாமும் அன்னையைப் பின்பற்றி எவ்வளவு இடர்பாடுகளைச் சந்தித்தாலும், பிறரை மையப்படுத்தியவர்களாக வாழ்வோம். என்றும் நமது பயணம் இனிதாகவே அமையும்!

கூர்மை நிறை செயலில் வெளிப்பட்டது. ஒளிவிடும் முத்துக்கள் ஒன்றாக கோர்த்து, முத்தாரம் செய்வது போல ஞானத்தின் மேன்மையையும் இயல்பையும் ஒன்றாக இணைத்து அன்னை மரியாவுக்கு புகழ் பாடி, அவரை போற்றுவோம்.

## ஞானம் அன்பு தூய்மை ஆன்மாவுக்கு கிடைத்த பரிசு

“வஞ்சனை நிறைந்த ஆன்மாவில் ஞானம் நுழைவதில்லை, பாவத்திற்கு அடிமையான உடலில் ஞானம் குடிகொள்வதில்லை (சாலமோனின் ஞானம் 1:4).

அன்னை மரியா பெற்ற ஞானம் கடவுளின் அன்பான கொடை, மரியாவின் ஆன்மாவில் பழிவாங்கும் எண்ணமோ, வஞ்சனையோ, பாவம் செய்யும் எண்ணங்களோ இருந்திருக்க வாய்ப்பில்லை. மரியாவின் அன்பு நிறை தூய்மை உள்ளம் அவரைத் தேடி வருகின்ற பக்தர்கள் அனைவரையும் பாவநிலையிலிருந்து மீட்டுக் காக்கின்றது. எதிரிகளையும் தமக்கு துன்பம் விடுவிக்கும் மனிதர்களையும் அன்னை மரியா அன்பின் உள்ளத்தோடு பார்த்து வந்தார். எனவே கடவுள் அன்பு நிறை தூய்மை உள்ளம் கொண்ட மரியாவிற்கு ஞானத்தை பரிசாகினார்.

கடவுளின் பரிசான ஞானம் செய்யும் வேலை என்னவெனில் மனிதர்களை தீய செயல்களில் இருந்து பாதுகாப்பதும், இறைவனோடு உறவு கொண்டு புது உருமாற்றம் கொண்டு வாழ்விக்கவும், பழைய வாழ்வை மாற்றி, புதிய வாழ்வை புதுப்பித்து, இறைவனை நோக்கி வழிநடத்துவதாகும். மரியாவின் ஞானமும், அன்பும், தூய உள்ளமும் கொண்ட அனைத்து பக்தர்களுக்கு பரிசாக கொடுக்கப்படுகிறது.

## பேரறிவுள்ள ஞானம் இறைப்பற்றுள்ளோருக்கான கடவுளின் ஆசிர்வாதம்

“ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம். தூயவராகிய அவரைப் பற்றிய உணர்வே மெய்யுணர்வு” (நீதிமொழிகள் 9:10).

இறைப்பற்றுள்ளவர்களின் எண்ணமும் செயலும் ஆண்டவர் ஒருவரைப் பற்றியே இருக்கின்றது. ஞானம் மிகுந்தவர் பேரறிவும், பேராற்றலும், பேரன்பும், ஆழமான நம்பிக்கையும் கொண்டுள்ளவர்கள். அந்த ஞானம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. கடவுளிடம் அச்சம் கொண்டு பாவம் செய்வதை விட்டு விலகி, இறைப்பற்றுள்ள மனிதர்களிடம் அது கடவுளின் ஆசீர்வாதமாக கிடைக்கும்.

ஞானமுள்ளவர்களின் கண்கள் நல்லதை பார்க்கும் ஆர்வமும், உண்மையை வெளிப்படுத்தும் மொழியாகவும் இருக்கும். அவர்களின் உணர்வுகள் தூய இறைவனின் அன்பைப் பற்றியும், கட்டளைகளை கடைப்பிடித்தல் பற்றியும், சரியானதை பற்றியும் இருக்கும். அன்னை மரியாவின் வாழ்வு இவ்வாறு ஞானம் நிறைந்த வாழ்க்கைக்கு சிறந்த சான்றாகும். அன்னை மரியா நேர்மையின் மகளாக, உண்மையில் பிறந்து, உன்னத ஆண்டவரின் நிழலில் தவழ்ந்து, உலகை அன்பில் ஆட்சி செய்து, நீதியின் மீது பற்று கொண்டு, உள்ளத்தால் ஆண்டவரை நன் மனதுடன் நினைத்து உறுதியுடன் அவரைத் தேடுவதற்கு காரணம் அவரது இறைப்பற்றே ஆகும். அதுவே கடவுளின் உன்னதமான உயர்வான கொடையான ஞானச்சுடரை பெற வழி வகுத்ததாகும். “ஆண்டவரிடம் அச்சம் கொள்ளுதலே ஞானத்தின் ஆணிவேர் அதன் கிளைகள் நீடிய வாழ்நாட்கள் (சீராக் 1:20).

இவ்வாறாக அன்னை மரியாவின் நிறை ஞானத்தை நாம் அறியலாம். எளிமையான சிறியவரான அன்னை மரியாவை கடவுள் தேர்ந்தெடுத்து அவரை வல்லமை படைத்த ஞானத்தில் நிரப்பிய கடவுளின் உண்மையில் உயர்ந்தவர். நாமும் இறைவனை நிதமும் தியானித்து அவரோடு நட்புறவு கொண்டு ஒவ்வொரு செயலிலும் இறை பிரசன்னத்தை உணரவே அன்னை மரியா நம் அனைவரையும் அழைக்கிறார். அப்போது நாம் நாமும் ஞானம் நிறைந்தவர்களாய் எல்லா இடமும் ஒளி வீசுவோம், இறைப்பற்றும், இறைஞானமும் இறைவன் தர வேண்டி ஞானம் நிறை அன்னை மரியாவிடம் செபிப்போம்.







அறிவித்துக் கொண்டார். தன் ஆட்சியின் தொடக்கத்தின் நினைவாக கி.பி. 1348ஆம் ஆண்டு சிமோனே அந்ரேயோச்சி என்ற கலைஞரை கொண்டு வடிவமைக்கப்பட்ட 124 படிகள் கொண்ட ஏறுதளத்தை ஆலய முகப்பில் உருவாக்கி, திறந்து வைத்தார். இப்படிகளில் தண்டனை கைதிகள் கொல்லப்பட்டனர். இப்படிகளை அமைக்க காரணமான கோலாவும் இங்கு கொல்லப்பட்டது ஒரு வரலாற்று விசித்திரமே. அவர் கொல்லப்பட்ட இடத்தில் அவரது உருவச்சிலை இன்றும் உள்ளது.



கி.பி 1571ல் மார்க்அந்தோணியோ கொலோன்னா தலைமையில் துருக்கிய கப்பற்படையின் மீது லியோபான்ட் போரில் வெற்றி பெற்றதன் நினைவாக, மிகப்பெரிய வெற்றி கொண்டாட்டமும், நன்றியறிதலும் அன்னை மரியாள், விண்ணக்கத்தின் பலிபீடம், ஆலயத்தில் சிறப்பிக்கப்பட்டது. அன்னைக்கு நன்றியறிதலாக, ஆலயத்தின் மேற்கூறையானது தங்க நிறத்தில் வர்ணம் பூசப்பட்டு அற்புதமான ஓவியங்கள் வரையப்பட்டன. கி.பி. 1798ல் உரோமை பிரெஞ்ச் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பொழுது, இவ்வாலயமானது ஒரு மாட்டுக் கொட்டிலான மாற்றப்பட்டு, அதன் புனிதத்துவம் இழிவு படுத்தப்பட்டது.



## முடிவு பெறாத ஆலய முகப்பு

இந்த ஆலயத்தின் முகப்பு இன்றளவும் முடிவு பெறாத நிலையிலேயே உள்ளது. இம்முகப்பிலும், முன்சுவரிலும் வரையப்பட்டிருந்த மொசைக் ஓவியங்களில் முகப்பில் அரைவட்ட வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ள சிறபத்தைத் தவிர மற்ற அனைத்தும் அழிந்து போய்விட்டன. கோதிக் சன்னல்கள் இன்றளவும் பாதுகாப்பாய் உள்ளன. இவ்வாலயம்



கோதிக் கட்டிட கலையில் கட்டப்பட்டுள்ளது என்பதற்கு சான்றாக இச்சன்னல்கள் உள்ளன. இங்கு பல கலைப் பொக்கிசங்கள் பாதுகாக்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்று 15ஆம் நூற்றாண்டைச் சார்ந்த புகழ்பெற்ற ஓவியர் பின்றுக்கியுவின் ஓவியமாகும். இவ்வோவியம் ஆலயத்தின் வலது புறத்தில் உள்ள சிற்றாலயத்தில் உள்ளது. இதில் சீயன்னா நகரைச் சார்ந்த புனித பெர்னார்டுவின் வாழ்க்கை நிகழ்வுகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆலயத்தின் மரத்தாலான உட்புற மேற்கூரையானது காண்போரை வியப்பில் ஆழ்த்துகிறது.



மேலும், இங்குள்ள ஓவியர் ஜிரோலோமோ சிசின்லான்தேவின் ஆண்டவரின் உருமாற்ற நிகழ்வை குறித்த ஓவியமும் தத்ரூபமாக உள்ளது. புகழ் பெற்ற ஓவியரான பியத்ரோ கவாலினியின் எஞ்சியுள்ள ஒரே ஒரு ஓவியமும் இங்கு பாதுகாக்கப்படுகிறது. இந்த ஓவியத்தில் அன்னை மரியாள் குழந்தையை கையில் ஏந்தியுள்ளது அற்புதமாக வரையப்பட்டுள்ளது.

### அன்னை மரியாள், விண்ணக்கத்தின் பலிபீடம் - திருப்படம்

கி.பி. 10-11ம் நூற்றாண்டைச் சார்ந்த பைசான்திய திருப்படமான, "அன்னை மரியா விண்ணகத்தின் பலிபீடம்", இவ்வாலயத்தின் மைய பலிபீடத்திற்கு மேல் நிறுவப்பட்டுள்ளது. கி.பி 1636ஆம் மார்ச் 29ம் தேதி திருத்தந்தை எட்டாம் அர்பன் இத்திருப்படத்திற்கு மணிமுடிசூடினார். கி.பி. 1948ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் நாள் திருத்தந்தை 12ஆம் பயஸ் உரோம் நகர் மக்கள் அனைவரையும் இந்த ஆலயத்தில் இருந்து பரிந்து பேசும், "அன்னை மரியாள் விண்ணகத்தின் பலிபீடம்," அன்னையிடம் ஒப்படைத்தார்.

### ஆரா சியேலியின குழந்தை இயேசு

இந்த ஆலயத்தின் மற்றொரு சிறப்பு இங்குள்ள குழந்தை இயேசுவின் திருஉருவமாகும். 15ஆம் நூற்றாண்டில் கெத்சமணி தோட்டத்திலிருந்து கொண்டுவரப்பட்ட ஒலிவ மரத்தில்





# மாதா மன்றாட்டு மாலை



23

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

### ஞானம் நிறைந்த பாத்திரமே

"ஆண்டவரிடம் அச்சம் கொள்ளுதலே ஞானத்தின் தொடக்கம், அது இறைப்பற்றுள்ளோர்க்கு தாய் வயிற்றில் இருக்கும் பொழுதே வழங்கப்படுகிறது" (சீராக் 1:14).

அன்னை மரியா தவறு செய்து கடவுளின் கருணை மனதை புண்ணாக்கவில்லை, இறைப்பற்று, இறையச்சம் ஆகியவை கொண்டு வாழ்ந்த அன்னை மரியா ஞானம் நிறை பாத்திரமானார். கடவுள் ஒருவரே ஞானம் நிறைந்தவர், ஆனால் அந்த ஞானம் மரியா வடிவில் தோன்றி அவர் வழியாக இயேசு ஒருவரில் வெளியானது, ஞானம் நிறைந்த கிறிஸ்து தூய ஆவியை நம்மில் பொழிந்து ஞானத்தின் கொடைகளை நமக்கு பரிசாக தருகிறார்.

### மரியா - ஞானம் நிறைந்த பேரொளி

"எனக்கு அறிவு புகட்டுவோர் அனைவரினும் நான் விவேகம் உள்ளவனாய் இருக்கிறேன் ஏனெனில் உன் ஒழுக்கு முறைகளை சிந்திக்கிறேன்" (திருப்பாடல் 119:99).

அன்னை மரியா ஞானம் நிறைந்த பேரொளி என்பதால் அவரின் ஞான ஒளியின் பிரசன்னம் எல்லா இடங்களிலும் இருக்கும். நன்மை செய்து கடவுளை மேன்மைப்படுத்தி பெருமைப்படுத்தும் மாந்தர் மீதும் பக்தர் மீதும் அன்னை மரியாவின் ஞானம்நிறைப் பார்வை என்றும் இடைவிடாது இருக்கும். தீமை செய்து கடவுளின் மனதை காயப்படுத்தி மனிதனின் அன்பையும் அரவணைப்பையும் புறக்கணிக்கும் மனிதர் மீதும் அவரது பார்வை தங்கும். அவர் எதையும் ஒளிநிறை பார்வையாலே தன்னை நம்பி வரும் பக்தர்களின் குறைத்தீர்த்து எங்கும் எதையும் உருமாற்றம் செய்து கடவுளின் வல்லமையை வெளிப்படுத்துவார் அவரை அணுகும் அனைவரும் ஆண்டவரின் நண்பராகவும் அன்பராகவும் மாற வாழ முடியும்.

"ஞானம்"- என்றுமுள்ள ஒளியின் சுடர், கடவுளது செயல் திறனின் கறைப்படியா கண்ணாடி, அவருடைய நன்மையின் சாயல் (சா.ஞா 7:26).

இவ்வாறாக ஞானத்தின் உன்னதமான உண்மையையும் உயர்வையும் நாம் அறியலாம். அன்னை மரியாவின் ஞானம் தன்னலமற்ற தியாகசுடராகவும், குன்றின் மேலிட்ட விளக்கவும், அணையாத ஜோதியாகவும், ஒளிவீசி கொண்டிருக்கிறது. அவரின் ஞானம் இருளில் நடக்கும் மனிதருக்கு ஒளியாகவும், வெறுப்பில் நடக்கும் மாந்தருக்கு அன்பாகவும் செயல்படுகிறது.

### ஞானத்தின் இயல்பும் மேன்மையும்

"ஞானம்- ஆற்றல் கொண்டது, அவ்வாற்றல் அறிவுடையது, தூய்மையானது, தனித்தன்மை வாய்ந்தது, பலவகைபட்டது, நன்மையானது, உயிரோட்டம் உள்ளது, தெளிவு மிக்கது, மாசுபடாதது, வெளிப்படையானது, கேடுறாதது, நன்மையை விரும்புவது, கூர்மையானது" (சாலமோனின் ஞானம் 7:22).

இந்த ஞானத்தின் இயல்பும் மேன்மையும் அன்னை மரியின் ஞான பாத்திரத்தில் இருப்பதை நாம் அறியலாம். அன்னை மரியின் ஆற்றலும் அறிவும், நல்லது எது? தீயது எது? என பகுத்தறிந்து தீமையை தள்ளவும், நன்மையை கொள்ளவும் வழிவகுக்கும். அவரது உள்ளம் எப்போதும் கடவுளைப் பற்றியே சிந்தித்து, அவர் விரும்புவதை செய்து, ஏழை எளிய மக்களை நன்மைகளால் மகிழ்விப்பதாகும். அவரின் தூய்மை நிறை உள்ளம்



# இறையடியார்
## அன்னை மரியா லுயிசா அசியோன்



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

அன்னை மரியா லுயிசா அசியோன், நேபிள்ஸ் (Naples) நகரத்தின் மரியின் ஊழியர் கன்னியர்கள் சபையின் நிறுவுனர். இவர் இதே நகரத்தின் அருகில் உள்ள பார்ரா என்ற இடத்தில் பிப்ரவரி 28, 1799-இல் பிறந்து, நேபிள்ஸ் நகரில் ஜனவரி 10, 1875-இல் இறந்தார். கிட்டத்தட்ட 76 ஆண்டுகள் வாழ்ந்த அவரது வாழ்க்கையில் சிக்கலான சூழ்நிலைகளை அனுபவித்தார், அவை அவரது ஆன்மீகப் பயணம் குறிப்பிடத்தக்க வகையில் வடிவமைத்து ஒரு துறவற சபையை நிறுவ காரணமாய் அமைந்தது. மருத்துவர் ஜோசப் மற்றும் போர்த்துனதா ஆகியோரின் பத்து பிள்ளைகளில் மூத்தவராகப் பிறந்த அவர், அதே குடும்பத்தில் மிக அடிப்படையான கல்வியையே பெற்றார் அக்காலத்தில் பொது பாடசாலைகள் இல்லை. எனவே, வீட்டில் இருந்து ஒரு பெண் படிப்பது மிகவும் அரிதானது. இளம் பருவத்தில், வயது சார்ந்த சிறு விளையாட்டுகளுக்கு மத்தியிலும், பிரார்த்தனை, கல்வி மற்றும் கிறிஸ்தவக் கோட்பாடு பயிலுதல் ஆகியவற்றிறாக பல நேரங்களை செலவிட்டார். இதன் மூலம் தன்னுடைய நண்பர்களுக்கு ஒரு முன்மாதிரியாக திகழ்ந்தார் தன்னுடைய சக தோழிகளுக்கும் தான் அறிந்தவற்றை கற்பித்தார். காலப்போக்கில் அவருக்குத் துறவு வாழ்க்கை மீது ஈர்ப்பு உருவானது அவரிடம் நிகழ்ந்த இந்த மாற்றம், தலைமைப் பண்பின் கவர்ச்சியை இன்னும் அதிகரித்தது. அவர் ஒரு துறவற சபையில் *(Ritiro dell'Addolorata all'Olivella)* சேர்ந்து, பன்னிரண்டு ஆண்டுகள் அங்கு மேல்நிலைப் பொறுப்பில் (Superior) இருந்தார். ஆனால் பின்னர், இளம் பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கும், துன்பம் மற்றும் வேதனையில் இருக்கும் பெண்களுக்கு துணையாக இருப்பதற்குமாக ஒரு துறவற சபையை நிறுவ வேண்டும் என்ற அழைப்பை உணர்ந்தார். அன்னை மரியாவின் பெயரிலேயே 1840 மே 8-ஆம் தேதி, நேபிள்ஸ் நகரத்தின் வியாகுல மாத சபையை நிறுவினார். பலருக்கும் உந்துதலாக இருந்து, பல நல்ல முயற்சிகளை, திரு அவைக்காகவும் சமூக வளர்ச்சிக்காகவும் மேற்கொண்டு அன்னை மரியா லுயிசா ஜனவரி 10, 1875-இல் இறந்தார். மூன்று நாட்கள் அவருடைய இறந்த உடல் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட கட்டாயம் உருவானது. ஏனெனில் அவரால் பயன் பெற்ற ஏராளமான பெண்கள் அவரை பார்க்க வந்தனர். அவர் எந்த அளவுக்கு மக்கள் பணி செய்திருப்பார் என்பதற்கு இதுவே சான்று. இறைஅடியார் அன்னை மரியா லுயிசா அசியோனின் புனிதப் பட்டம் கொடுப்பதற்கான பணிகள் 1890-இல் தாக்கல் செய்யப்பட்டது. 1909, 1910 மற்றும் 1947 ஆண்டுகளில், அவரின் எழுத்துகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அதன் பின்னர், அருளாளர் பட்டம் (beatification) கோரி நடத்தப்படும் வழக்கில் மேலும் முன்னேற்றங்கள் பதிவாகவில்லை.





இச்சிரூபமானது வடிவமைக்கப்பட்டது. இச்சிரூபம் வைக்கப்பட்டுள்ள இடத்தைச்சுற்றி, குழந்தை இயேசுவின் ஆசீர்வாதத்தால் பெற்று கொண்ட நன்மைகளுக்காக மக்கள் அளித்த காணிக்கைகளும், சாட்சியங்களும் வைக்கப்பட்டுள்ளன. 1798ஆம் ஆண்டு இச்சிரூபமானது பிரெஞ்ச் நாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. பின் பல்வேறு முயற்சிகளுக்கு பிறகு உரோம் நகருக்கு கொண்டுவரப்பட்டது. ஆனால், 1994ஆம் ஆண்டு விலைமதிப்பெறாத இச்சிரூபமானது திருடப்பட்டது. பின் கெத்சமனி தோட்டத்திலிருந்து கொண்டு வரப்பட்ட ஒலிவமரத்திலிருந்து மற்றொரு சிரூபம் செய்யப்பட்டு இந்த ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்து பிறப்பு பெருவிழா நள்ளிரவு திருப்பலியில் (உன்னதங்களிலே) இசைக்கப்படுகின்ற போது இச்சுரூபமானது குடிலுக்கு கொண்டுவரப்பட்டு, ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா வரை மக்களின் ஆராதனைக்காக குடிலிலேயே வைக்கப்படுகிறது.



### புனித ஹெலனாவின் திருப்பண்டம்

இந்த ஆலயத்தின் மற்றொரு சிறப்பு, பேரரசர் கான்ஸ்டன்டைனின் தாயார் புனித ஹெலனாவின் திருப்பண்டமானது இங்கு பாதுகாக்கப்படுகிறது. இவரின் பெருமுயற்சியால் கி.பி. 327ஆம் ஆண்டு எருசலேம் நகரில் உள்ள கொல்கொத்தா மலையில் புதைந்திருந்த இயேசு மரித்த புனித சிலுவையானது கண்டுபிடிக்கப்பட்டது.


உரோமையின் வரலாற்று சிதைவுகள், கோலோசேயம் போன்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்கள் உள்ள இடத்தில் இந்த ஆலயம் உள்ளதால் தினமும் ஆயிரக்காணக்கானவர் இங்கு வந்து செல்கின்றனர். யூபிலி ஆண்டில் திருப்பயணிகளாக உரோம் நகர் வருகின்ற ஒவ்வொருவரும் செல்ல வேண்டிய முக்கிய ஆலயங்களில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**திருப்பயணம் தொடரும்...........**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
# திருப்பாடல்கள் 81-98



சகோ. எட்மன். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21



**வலமிருந்து இடம்**

1) என் எதனால் அவனுக்குத் திருப்பொழிவு செய்தேன்?
2) எங்கள் ஆயுள் எவ்வளவு _______ என்பதை நினைத்தருளும்; மானிடர் அனைவரையும் வீணாகவா படைத்துள்ளீர்?
6) காலையில் உமது பேரன்பையும் _______ உமது வாக்குப் பிறழாமையையும பத்து நரம்பு வீணையோடும் தம்புரு, சுரமண்டல இசையோடும் எடுத்துரைப்பது நன்று.
9) ஆனால், உங்களுக்கு _______ கோதுமையை உணவாகக் கொடுப்பேன்;
10) அவன் _____ என் திருச்சட்டத்தைக் கைவிட்டாலோ, என் நீதிநெறிகளின்படி நடக்காவிடிலோ,
13) வறண்ட _______ பள்ளத்தாக்கை அவர்கள் கடந்து செல்கையில், அது நீரூற்றுகள் உள்ள இடமாக மாறுகின்றது;

**இடமிருந்து வலம்**

3) படைகளின் ஆண்டவரே! உமது உறைவிடம் எத்துணை _________!
4) எளியோர்க்கும் திக்கற்றவர்க்கும் எதை வழங்குங்கள்? சிறுமையுற்றோர்க்கும் ஏழைகட்கும் நியாயம் வழங்குங்கள்!





பயத்தை தரும். ஆனால் ஒரு உண்மையான கிறிஸ்துவருக்கு அது நம்பிக்கை நீரூற்றுக்கான வாசல் என்றும், அன்பில் நம்பிக்கை கொள்வோர் ஆண்டவரோடு நிலைத்து, அன்பும் இரக்கமும் பெறுவர் என கூறும் வாசகத்திற்கு கூர்மையுடன் இதய கதவை திறப்போம்.

**இரண்டாம் வாசகம் (உரோ 5:5-11)**

தூய ஆவியின் வழியாய் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது. ஆதலால் கடவுள் நம்மீது வைத்த அன்பினால் தம் ஒரே மகனை இம்மனுக்குலத்திற்கு கொடுத்து பாவத்திற்காய் சிலுவையில் மரிக்க திருவுளங் கொண்டு அதை நிறைவேற்றினார். அவர் தம் திருஇரத்தத்தால் நம்மை மீட்டுள்ளார். ஒரே ஒரு மனிதன் வழியாய் பாவம் இவ்வுலகத்தில் நுழைந்தது, அந்த பாவத்தின் வழியாய் சாவு வந்தது. எனவே மீட்பைப் பெற்ற நாம் அனைவரும் பாவத்தை விட்டு விலகி மீட்பைக் கொணர்ந்த இயேசுவை அன்பு செய்து வாழ வாசகத்தை கேட்போம். மனம் மாறுவோம்.

**மன்றாட்டுக்கள**

1. நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன என்பதை உணர்ந்து திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தங்களின் வாழ்வால் இம்மண்ணுலகத்தில் விண்ணகத்தை சுவைத்து அதை மக்களுக்கும் வழிகாட்ட ஒவ்வொருவரையும் உமது கருவியாக செயல்பட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா! கிறிஸ்தவ மக்களையும் அவரின் குடும்பங்களையும் நீர் ஆசீர்வதித்து வழிநடத்தும். இவர்களின் குடும்பங்களில் மரித்த ஆன்மாக்கள் வழியாக குடும்பம் ஆசீர்வதிக்கப்படவும் நன்மைகளால் நிரப்பபடவும் உமது அருளை தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. உயிர்தெழுதலும் வாழ்வும் நானே! என்னிடம் நம்பிக்கை கொள்பவர், இறப்பிலும் வாழ்வார் என்ற இறைவார்த்தையின் வழியாக எங்களுக்கு விசுவாசத்தை கொடுத்து எல்லா சூழ்நிலைகளிலும் உம்மை விட்டு விலகாத உறவாக நாங்கள் வாழ உமது அருளை பொழிந்து வழிநடத்த இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. எல்லாம் வல்ல அன்பு தந்தையே இறைவா! இறந்த நம்பிக்கையாளர்களின் நினைவு நாளை நினைத்து செபிக்கின்ற உலக கிறிஸ்தவ மக்களை உமது கரத்தில் தருகின்றோம். குடும்பங்களில் மரித்த ஒவ்வொரு அன்மாக்களும் நித்திய இளைபாற்றலை கொடுத்து இவர்களின் செபத்தால் உலகம் அமைதி அடையவும், பாவங்கள் மன்னிக்கப்படவும், தேவனின் ஆசீர்கிடைக்கவும் உமது அருளை தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

வாழ உமது அருளின் கொடையை தந்து உதவுமாறு இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. ஏழைகளின் குரலுக்கு செவி கொடுத்து நன்மைகளை வழங்கும் ஆண்டவரே! இன்றும் பொருளாதாரத்தில் பின் தங்கிய குடும்பங்களை ஆசீர்வதியும். அவர்கள் செய்யக் கூடிய தொழிலையும் பொருளாதாரத்தில் உயர்வதற்கு அவர்களுக்கு நீர் உறுதிணையாக இருந்து செயல்பட வேண்டுமென்று இறவைா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 31ம் ஞாயிறு (02.11.2025)

இறை இயேசுவின் அன்பார்ந்த இறை மக்களே! ஆண்டின் பொதுக்காலம் 31-ஆம் ஞாயிறை சிறப்பிக்கும் நமக்கு நம்பிக்கையை மையமாக வைத்த வாசகங்களை திருஅவை நமக்கு வழங்குகிறது. யோபு, ஆண்டவர் அனுமதித்த அனைத்து துன்பங்களைப் எதிர்கொண்டும் கூட ஆண்டவர் மீது நம்பிக்கை தளராமல் இருந்தார். தனது மீட்பர் உயிரோடு இருப்பதாகவும், அவர் தன்னை ஆதரிப்பார் என்றும் யோபு நம்பினார். தன்னை ஆழமாக காயப்படுத்திய தன் நண்பர்களுக்காகவும் யோபு வேண்டிக் கொண்டார். சோதனைகளில் இருந்து விடுவிக்கப்பட்டு இரட்டிப்பான ஆசிர்வாதங்களை பெற்றார். கடவுளின் அன்பு நமக்கு தரப்பட்ட தூய ஆவியின் மூலம் கிடைத்துள்ளது. தன் ஒரே மகன் இயேசுவை சிலுவையில் ஏற்றி நம் பாவங்களுக்காக மரிக்க செய்து தனது அன்பை வெளிப்படுத்துகிறார் நம் ஆண்டவர். இதன் மூலம் ஆண்டவரோடு ஒப்புருவாக்கப்பட்ட நாம் இயேசு கிறிஸ்துவின் மூலம் ஆண்டவருக்குள் பெருமை கொள்ளலாம். என்னை விட பெரியவர் என் தந்தை அவருடைய விருப்பத்திற்காக தான் நான் இங்கு வந்தேன் தனது சித்தத்திற்காக அல்ல என்னை அனுப்பியருடைய சித்தத்தை நிறைவேற்ற வந்தேன் என்று சொல்கிறார் இயேசு. ஆண்டவருடைய பிள்ளைகளாகிய நாம் இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டு வாழ்ந்தால் கடைசி நாளில் நாமும் உயிர்ப்பிக்கப்பட்டு விண்ணக வாழ்வை அடைவது உறுதி என்ற சிந்தனையோடு திருப்பலியில் பங்கெடுப்போம்.

**முதல் வாசகம் (சால.ஞா. 3:1-9)**

இறந்த நம்பிக்கையாளர்களின் நினைவை முக்கியத்துவப்படுத்தி, கடவுள் அவர்களைச் சோதித்து அறிந்து பின் அவர்களைத் தமக்கு தகுதி என கண்டார் எனவும், இறைவனின் அரவணைப்பு எல்லையற்றது எனவும், நிலைவாழ்வுக்கான திறவுகோல் கிறிஸ்துவோடுள்ள நமது உறவில் உள்ளது எனவும், நம்பிக்கை அற்ற நபருக்கு மரணம்





7) அது ________ உண்மையான சான்றென உறுதியாயிருக்கும்; நிலாவென என்றென்றும் நிலைத்திருக்கும்.

8) எம் கடவுளாம் தலைவரின் இன்னருள் எம்மீது தங்குவதாக! நாங்கள் செய்பவற்றில் எங்களுக்கு வெற்றி தாரும்! ஆம், நாங்கள் செய்பவற்றில் __________!

14) அவர்கள் செய்த எதன் பொருட்டு அவர்களை அழிப்பார்?

**மேலிருந்து கீழ்**

2) எம் ________ உம் கண்முன் நிறுத்தினீர்; மறைவான எம் பாவங்களை உம் திருமுக ஒளிமுன் வைத்தீர்.

3) 'ஆண்டவர்' என்னும் பெயர் தாங்கும் உம்மை, உலகனைத்திலும் உன்னதரான உம்மை, அவர்கள் ________ கொள்வார்களாக!

6) யாருடைய வீட்டாருக்கு வாக்களிக்கப்பட்ட தமது பேரன்பையும் உறுதிமொழியையும் அவர் நினைவு கூர்ந்தார்?

7) என் தலைவரே! நீரோ இரக்கமிகு இறைவன்; அருள் மிகுந்தவர்; ________ சினமுறாதவர்; பேரன்பும் உண்மையும் பெரிதும் கொண்டவர்.

10) ஆண்டவரோ எனக்கு அரண் ஆனார்; என் கடவுள் எனக்குப் ________ தரும் பாறை ஆகிவிட்டார்.

11) ஏனெனில், என் ________ துன்பத்தால் நிறைந்துள்ளது; என் உயிர் பாதாளத்தை நெருங்கிவிட்டது.

13) வயல்வெளியும் அதில் உள்ள அனைத்தும் களிகூறட்டும்; அப்பொழுது காட்டில் உள்ள அனைத்து மரங்களும் அவர் திருமுன் களிப்புடன் என்ன செய்யும்?

14) பெலிஸ்தியர், ____ மற்றும் எத்தியோப்பியா நாட்டினரைக் குறித்து, 'இவர்கள் இங்கேயே பிறந்தவர்கள்' என்று கூறப்படும்.

**கீழிருந்து மேல்**

1) நகரின் அடித்தளம் எவைகளின் மீது அமைந்துள்ளது?

4) வறண்ட 'பாக்கா' பள்ளத்தாக்கை அவர்கள் கடந்து செல்கையில், அது ________ உள்ள இடமாக மாறுகின்றது; முதல் பருவமழை அதனை நீர்நிலைகள் நிறைந்த இடமாக்கும்.

5) உன்னதரின் பாதுகாப்பில் வாழ்பவர், எல்லாம் வல்லவரின் ________ தங்கியிருப்பவர்.

8) அவர்கள் என்றென்றும் ________ கலங்குவார்களாக! நாணமுற்று அழிந்து போவார்களாக!

12) உமது ________ என்னை அழுத்துகின்றது; உம் அலைகள் அனைத்தும் என்னை வருத்துகின்றன.

14) கெபாலியர், அம்மோனியர், அமலேக்கியர், பெலிஸ்தியர் மற்றும் ________ மக்களே அவர்கள்.

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-10-2025**

# மணிச்சொல்லி அழைப்போம்



கலைச்சுடர் முனைவர். ஜோ.விண்ணரசன், மேல்வழி

மணிசொல்லி அழைப்போம்
மனம்பேசி செபிப்போம்
மரியாவின் துதிப்பாடி
மலராக தினம்சூடி
மறவாமல் பிறழாமல்
உறவாடி களிப்போம்

1. இயேசுவின் வரலாற்றை
சுருக்கமாக நினைப்போம்
இயேசுவிடம் நம்மையும்
நெருக்கமாக இணைப்போம்
அன்னை மரியாவை
துணையாக அழைப்போம்
அன்பு மகனிடமே
முழுமையாக கொடுப்போம்
(மரியாவின் துதிப்பாடி...)

2. துன்பங்கள் துயரங்கள்
அகந்திடவே செபிப்போம்
தூய்மைநிறை வாழ்வதனை
துலங்கிடவே துதிப்போம்
அலகையின் சோதனைகள்
வென்றிடவே துடிப்போம்
அன்றாடம் நன்மைகளை
ஆற்றிடவே குதிப்போம்
(மரியாவின் துதிப்பாடி...)

3. நலன்கள் ஒவ்வொன்றுக்காய்
நன்றிக்கூறி உரைப்போம்
நாளெல்லாம் நற்செய்தி
நல்கிடவே தொடுப்போம்
பஞ்சம்பசி போர்களெல்லாம்
ஒழிந்திடவே செபிப்போம்
பசுமையான பூமிதனை
நிலைத்திடவே பதிப்போம்.
(மரியாவின் துதிப்பாடி...)





இதை மனதில் வைத்து நாமும் நேர்மையான மனதோடும் தாழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடும் இருக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**முதல் வாசகம் (சீரா.ஞா 35:12-14, 16-18)**

ஆண்டவரின் விருப்பத்திற்கேற்ப பணி செய்வோர் ஏற்றுக்கொள்ளப்படுவர் .தங்களை தாழ்த்துவோரின் வேண்டுதல் முகில்களை ஊடுருவிச் செல்லும். நீதிமான்களுக்கு தீர்ப்பு வழங்குகிறார். கைம்பெண்களின் கண்ணீரை காண்பவராய் அதைத் துடைப்பவராய் கைவிடாது காக்கும் ஆண்டவரின் அன்பையும் நீதியையும் உணர்ந்தவர்களாய் கடவுளின் வார்த்தைகளை ஏற்று ஆண்டவரின் விருப்பத்தை அறிந்து வாழ முயற்சிப்போம். இறை வார்த்தையை உணர்ந்து வாழ்வோம்.

**இரண்டாம் வாசகம் (2 திமொ 4:6-8, 16-18)**

நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தை காத்துக் கொண்டேன் என்கிறார் புனித பவுல். நீதியான கடவுள் நீதியை அனைவருக்கும் ஏற்றத்தாழ்வின்றி வழங்குவார், அவரின் செய்தியை அனைத்து நாட்டினரும் கேட்கும் படியாகவும் சிங்கத்தின் வாயிலிருந்தும் என்னை விடுவித்தார் என்றும் சாட்சிப் பகர்கின்றார். எனவே நாமும் நேர்மையான வாழ்க்கை வாழ்ந்து இறைவனுக்கு சாட்சிப் பகர வேண்டும் என்பதற்காகத்தான் தன்னை சாட்சியாக நிறுத்தி உள்ளதாக அறிவுறுத்துகின்றார். நாம் இறை வார்த்தையை வாசித்து அதன்படி வாழ இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் பரலோக பிதாவே! இன்று திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரையும் உம் கரத்தில் தருகின்றோம். தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை இறைவனின் பாதையில் பயணித்து, அவரோடு இணைந்து, இறைவேண்டலில் நிலைத்து, அன்புக்கு உகந்த நல் வாழ்க்கை வாழ மக்களை வழிநடத்த உமது அருளை தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. ஏழை மக்களுக்காகவே தன் வாழ்வை கரைத்த எம் இறைவா! உமது சமுதாயத்தில் எத்தனையோ ஏழைகள் வாழ வழியின்றி தவித்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் உமது கருணையை பொழிந்து அவர்களை மீட்டெடுத்து அன்புக்குரிய மக்களாக இவர்களின் வாழ்வு மிளிர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. எல்லாம் வல்ல அன்பு தந்தையே! உலகத்தில் இருக்கும் எல்லா மக்களையும் நீர் ஆசீர்வதியும். இறைவேண்டலில் நிலைத்து உம்மிலே ஆழ்ந்த விசுவாச வாழ்வு வாழவும் எப்பொழுதும் நன்றி உள்ள மக்களாக

பணிகளிலும் உம் நம்பிக்கையை விதைத்து இவ்வுலகத்தில் தடம் பதித்து வாழ இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நம்பிக்கையினால் எங்களை வழிநடத்தி உமது ஞானத்தை தரும் அன்பு இறவைா! இவ்வுலகத்தில் ஏழைகள், கைம்பெண்கள், ஆதரவற்ற நிலைக்கு தள்ளப்பட்டவர்கள் அனைவரையும் ஆசீர்வதியும். நீர் இவர்களுக்கு உமது அன்பை கொடுத்து நம்பிகைகையில் தளரா மனதுடன், தனது குறிக்கோளில் வெற்றியடைய உமது ஆற்றலை தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பான ஆண்டவரே! இவ்வுலகத்தில் வாழும் எல்லா கிறிஸ்தவ மக்களையும் நீர் தொட்டு ஆசீர்வதியும், உமது நம்பிக்கையில் தழைத்தோங்கி வாழும் இவர்கள் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக பிறருக்கு நம்பிக்கையை மட்டும் கொடுப்பவர்களாக வாழ்ந்து ஒளியின் மக்களாக சிறந்து விளங்க இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. காலங்களையும், நேரத்தையும் கணக்கீட்டு வழிநடத்தும் அன்பு இறவைா! தங்களின் விடாமுயற்சியினால் இறைத்தந்தையிடமிருந்து கிடைக்கும் நன்மையும், நீதியையும் பெற்று ஒவ்வொருவரும் இறை திட்டத்தின்படி தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ள உமது ஆசீரை தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 30ம் ஞாயிறு
## (26.10.2025)

இறைஇயேசுவில் பிரியமுள்ள அன்பு சகோதர சகோதரிகளே! இன்று நாம் பொதுக்காலம் 30-ஆம் ஞாயிறு திருப்பலிக்கு வந்துள்ளோம். இன்றைய வாசகங்கள் தாழ்ச்சியை மையமாக வைத்து எடுக்கப்பட்டுள்ளது. முதல் வாசகம் ஆண்டவர் முன்னிலையில் தன்னை தாழ்த்திக் கொள்வோரின் மன்றாட்டும், அவர் விருப்பத்திற்கு ஏற்றவாறு பணி செய்வோரின் மன்றாட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும், முகில்களை எட்டும் என்றும் கூறுகிறது. இரண்டாம் வாசகத்தில் பவுல் அடிகளார் கீழ்ப்படிந்து ஆண்டவருக்கு ஏற்புடைய வாழ்வு வாழ்வதில் திருப்தி அடைந்து நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையை ஆண்டவர் தருவார் என்று கூறுகின்றார் (நம்புகிறார்). நற்செய்தியில் அடுத்தவனை காட்டிலும் தன்னை தானே நேர்மையானவன் என்று சொல்லிக் கொள்பவரையும் ஆண்டவர் வெறுக்கிறார். தான் நேர்மையாக இருப்பதை பெருமையாக எண்ணி அடுத்தவரை இகழ்வாக என்னும் எண்ணம் எத்தகையதாக இருக்கும் என்று சிந்தித்துப் பார்ப்போம். அதேசமயம் தாழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடு பாவம் செய்தேன் என்று உணர்ந்து ஆண்டவரிடம் வந்தோம் என்றால் அவர் நம்மை ஏற்றுக் கொள்கின்றார்.





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஜான் பால் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்



## பொதுக்காலம் 28ம் ஞாயிறு
## (12.10.2025)

இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே, பொதுக்காலம் 28-ம் ஞாயிறை சிறப்பிக்கும் நமக்கு இன்று நம்பிக்கையையும் நன்றியையும் மையமாக வைத்து எடுக்கப்பட்ட வாசகங்களை திரு அவை நமக்கு அளிக்கிறது. நம்பிக்கை வைப்பதினால் நம் வாழ்வில் எத்துணை அதிசயங்களையும் நன்மைகளையும் ஆண்டவர் செய்வார் என்று இவ்வாசங்களை கேட்கும் போது நாம் புரிந்து கொள்ளும் வண்ணம் அமைந்துள்ளது. அவ நம்பிக்கையோடு வாழ்ந்தால் ஆண்டவர் செய்த அனைத்து நன்மைகளும் நமக்கு பலம் ஒன்றுமில்லாமல் போய்விடும். அது மட்டுமில்லாமல் ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்து நலம் பெற்ற பிறகு சமாரியன் ஒருவன் மட்டுமே நன்றி செலுத்த சென்றான். அந்நியரான சமாரியனுக்கு இருந்த நன்றி உணர்வு கூட சொந்த மக்களுக்கு இல்லாமல் போயிற்று, இது எப்பேர்பட்ட மனநிலை? நம் வாழ்வில் எத்தனை நன்மைகளை பெற்றிருந்தாலும் அதற்காக நாம் நன்றி சொல்கின்றோமா? இல்லை மற்ற ஒன்பது பேரைப் போல உள்ளோமா? என்று சிந்தித்து நம்பிக்கையோடு பல நன்மைகளை பெற்றவர்களாய் ஆண்டவருக்கு நன்றி செலுத்தி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**முதல் வாசக முன்னுரை (2 அரச 5:14-17)**

இன்றைய முதல் வாசகம் இரண்டு அரசர்கள் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. நாமானின் நிலையற்ற விசுவாசம், நிலையாய், ஆழமாய் அவர் உள்ளத்தில் பதிந்தது. உயிருள்ள, உண்மையான வாழும் கடவுளாகிய ஆண்டவரைத் தவிர வேறெந்த தெய்வத்திற்கும் எரிபலியோ வேறு பலியோ செலுத்த மாட்டேன் என்று உளமாற உறுதி எடுத்த நாமானின் நோய் தீர்த்த எலிசாவின் வார்த்தைகளையும் எண்ணி நாமும் ஆண்டவரை விசுவாசிப்போம். இறை வார்த்தைக்கு செவி மடுப்போம்.

**இரண்டாம் வாசகம் (2 தீமோத்தேயு 2:8-13)**

திருத்தூதர் பவுல் திமோதேயுக்கு கிறிஸ்துவின் நற்செய்திக்கு நம்பிக்கையாக இருப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறார். மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவை மனதில் நிறுத்தி, அவரை விசுவாசிப்பவர்கள் துன்பங்களை அனுபவிப்பார்கள் என்றும், அவர் உண்மையானவராக இருப்பதால் விசுவாசம் அற்றவர்களுக்கும் உண்மையானவராகவும் இருக்கின்றார் என்றும் பவுல் கூறுகிறார். நாமும் நம் வாழ்வில் சவால்களை எதிர்கொள்ளும் போது நம்மை படைத்தவனின் பலத்தை நம்பி அவருடைய வார்த்தைக்கு உண்மையாக இருக்க வேண்டும் என்றும், முழுமையான விசுவாசம் வைக்க வேண்டும் என்றும் அழைக்கும் இவ்வாசகத்திற்கு மனதை தயார் செய்வோம்.

**மன்றாட்டுக்கள்**

1. திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உம் திருக்கர வல்லமையால் ஆசீர்வதியும், தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை, இனம், மொழி, சாதி என்ற பாகுபாடுகள் இல்லாமல் தங்களை சந்திக்கின்ற மக்களுக்கு இறையாசீர் கொடுப்பவர்களாக மாற உமது அருளை தர, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. தம் மீட்பை வெளிப்படுத்தும் அன்பு இறைவா! உமது மீட்புக்காக காத்திருக்கம் ஏழைகள், கைவிடபட்டோர், நோயினால் பாதிக்கப்பட்டு தவிப்போர் ஒவ்வொருவருக்கும் உமது மீட்பை கொடுத்து, நல்ல உடல் சுகம் பெற்று வாழ இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் பரலோக பிதாவே! தொழு நோயினால் பாதிக்கப்பட்டு வீடுகளிலும், பல்வேறு இடங்களிலும் இருக்கும் உமது பிள்ளைகளை ஆசீர்வதியும், தொழு நோயிலிருந்து முழுமையாக சுகம் பெற்று மற்ற மக்களை போல் இச்சமுதாயத்தில் வாழ இறைவா உமது அருள் கொடைகளை தர உம்மை மன்றாடுகின்றோம்.
4. இறையழைத்தலின் நாயகனே எம் இறைவா! உமது அழைப்பை ஏற்று உமது பணியை செய்ய முன் வருகிறேன் என்று உமது திருவுளத்தை ஏற்று வாழும் உமது பிள்ளைகளை ஆசீர்வதியும். தங்களது சொல்லாலும், செயலாலும் உமக்கு பிரமாணக்கமாய் இருந்து செயல்பட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 29ம் ஞாயிறு
## (19.10.2025)

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! இன்று ஆண்டின் பொதுக்காலம் 29 ஆம் ஞாயிறு சிறப்பிக்கும் நமக்கு திருஅவை இடைவிடாமல்





செபிக்க அழைப்பு விடுக்கிறது. இயேசுவே செபிப்பதன் முக்கியத்தை உவமையாக மக்களுக்கு கூறுகின்றார். நேர்மையற்ற நடுவர் ஒருவனிடம், கைம்பெண் தமக்கு நீதி வேண்டி கொடுத்த நெருக்கடி நடுவருக்கு தொல்லையாக இருந்தாலும் அப்பெண்ணிற்கு உடனே நீதி வழங்க விரும்பவில்லை. இருப்பினும் அவள் கொடுத்த தொடர் தொல்லையால் நடுவர் அப்பெண்ணிற்கு நியாயம் (நீதி) கிடைக்க செய்கின்றார் என்றால், நம்மை படைத்த ஆண்டவர் நாம் செய்யும் தொடர் வேண்டுதலால் நமக்கு செவிசாய்க்காமல் இருப்பாரோ? நாம் தொடர்ந்து ஏதாவது ஒன்றை கருத்தில் வைத்து நம்பிக்கையோடு வேண்டும்போது அது நமக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையும் நம்மில் வளரும். இயேசு கற்றுத் தந்த செபத்தில், எந்த நம்பிக்கையில் தந்தையின் ஆட்சி வருக என்று செபிக்கிறோமோ அதே நம்பிக்கையோடு நாம் இறைவேண்டல் செய்ய வேண்டும். நாம் அனைவரும் நம்பிக்கையோடு செபித்து மனம் தளராமல் இருக்க இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**முதல் வாசகம் (வி.ப 17:8-13)**

ஆண்டவர் மோசையை விடுதலையின் வழிகாட்டியாக தேர்ந்து அவரை வழிநடத்தியதையும் அமலேக்கியர்களுடன் இஸ்ரயேலர் போரிடும்போது யோசுவாவை முன்னிறுத்தி போரிடச் செய்து அவர் இறைவேண்டல் செய்தார். அப்பொழுது அவர் தம் கைகளை உயர்த்திய போதெல்லாம் வெற்றி கண்டதை வாசகங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. அதேபோல் விண்ணகத் தந்தையை நோக்கி கைகளை உயர்த்தி நாம் உருக்கத்திடனும் உண்மையுடனும் செபிக்கும் போது நம் மன்றாட்டுகளும் கேட்கப்படும் என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து இறைச் செய்தியை உற்று கேட்போம்.

**இரண்டாம் வாசகம் (2 திமொ 3:14-4:2)**

கிறிஸ்து இயேசுவிடம் இணைந்து இறைப்பற்றுடன் வாழ விரும்புவோர் அனைவரும் இன்னலுறுவர். புனித பவுல் கற்றுத் தந்த போதனை, நன்னடத்தை, நோக்கம், நம்பிக்கை, பொறுமை, அன்பு, மன உறுதி ஆகியவற்றைப் பின்பற்றி இறைப்பற்றுடன் இணைந்து வாழ்ந்தால் கடவுளின் மனிதர் என்ற தகுதியைப் பெறுவாய் என்று உரைக்கும் இரண்டாம் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. நம்பிக்கையின் நாயகனே, எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரையும் நம்பிக்கையின் ஒளியை கொடுத்து ஆசீர்வதியும். இவர்கள் செய்யக்கூடிய எல்லா